முருகன் துணை

# ஏநாதி நாத நாயனார்

## சரித்திரம்

சென்னை: ஸ்ரீபால விநோத நாடக சபாவின் உபாத்தியாயர்

நாடகாசிரியர் ச. க. சங்கரலிங்கக் கவிராயர் அவர்கள் இயற்றியது.



64/2009

28 APR 1935 MADRAS

Accn. No: 67839
No of Pages: 78

சென்னை :
...ன நாயகர் ஸன்ஸ் பதிப்பு.

1935.

[விலை அணா ...

உ

முருகன் துணை

# விபூதிமான்மியம்

என்னும்

# ஏநாதி நாத நாயனார்

## சரித்திரம்

இது

உடுமலை: ஸ்ரீமான் சரபகவி மாணவரும்
சென்னை ஸ்ரீ பால விநோத நாடக சபாவின் ஆசிரியருமான
சங்கீத சாஹித்திய சந்தவண்ணச் சரபம்
நாடகாசிரியர்:

**ச. சு. சங்கரலிங்கக் கவிராயர்**

எழுதியது.

பிரசுரித்தவர்கள்:

**B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,**

திருமகள்விலாச அச்சியந்திரசாலை,

சென்னை.

1935.

## குரு வணக்கம்

வந்தச்சரபத் திருவ டயன் மால்
வழுத்தி முறைகேட் டமரர் குழாம்
வணங்கி வாழ்த்த வீருடன்
வருவோர்க் கெழுந்தே சமர்க் களத்தில்
அந்தச் சுரபத் மன் முதலோ
ரடியோ டழியச் சமர் புரிந்தாங்
கருள்செய் துயர்வா னர சளித்த
வணிசே வலனல் லருட் பெருக்கால்
எந்தச் சரபக் கவிகளும் வந்
தெதிர்க்க முடியா தாக்குருவி
என்னப் பறக்கு மாறு திசை
எட்டும் புகழ்செந் தமிழ்ப்பாடி
சந்தச் சரபக் கவி முத்து
சாமியெனச்சார்ந் துடு மலையில்
ஜயிப்பா ரின்றி வீற் றிருந்த
சாந்தப் பெரியார் சரண் பணிவாம்.

உ

முருகன் துணை

# ஆக்கியோன் வாக்கியம்

நாடகவுலகில் நமது நாயனாரின் சரித்திரமும் ஒன்று என்பது பிரசித்தம். திருவெண்காடர் என்னும் பட்டினத்தார், சிறுத்தொண்டர், மார்க்கண்டேயர், சுந்தரமூர்த்திசுவாமி என்னும் பல பெரியோர்களின் புராணக் கருத்தைக்கொண்டும், ராமதாஸ், காளிதாஸ், சக்குபாய் என்னும் தாசர்களின் பக்தவிஜயக் கதையைக்கொண்டும், சைவ வைஷ்ணவ சம்பிரதாயப்படி நாடகரூபமாக்கி நடிகர்களின் மூலம் அரங்கேற்றுவித்து, நாடகவாயிலாகவே நம் சகோதர சகோதரிகளுக்கு நற்புத்தி நற்பக்தி புகட்டுமார்க்கத்தைக் கைக்கொண்ட பல கவியாசிரியர்களின் பழக்க வழக்கத்தை யனுசரித்து, பட்டினத்தார், சிறுத்தொண்டர், மார்க்கண்டேயர், ராமதாஸ், சக்குபாய் முதலிய நாடகங்களை எழுதி அரங்கமேடையில் நடித்துக்காட்டிப் பின்னதை புஸ்தகரூபமாக அச்சிட்டிருக்கின்றேனென்பதை யறியாதாரிலர்.

அதுபோல் அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவரும் புரட்டாசிமாத உத்ராட நட்சத்திரத்தில் உஷக்காலவேளையில் உமாபதியின் தெரிசனம்பெற்று மோக்ஷசாம்ராஜ்யம் சென்றவரும், சோழ தேசத்திற்குப் பிரதானமாக விளங்குங் குடந்தைமாநகர்க்கடுத்த காவிரிக்கரையிலிருக்கும் எயினனூர் என்னும் க்ஷேத்திரவாசியும், விபூதியாகிய வெண்ணீற்றின் மகிமையை விளங்கவைத்தவருமான ஏனாதிநாத நாயனாரவர்களின் சரித்திரத்தை சகல நடிகர்களும் நாடகரூபமாக நடித்துக்காட்டும் கதானுசாரப்படி எழுதிவைத்தேன்.

கல்வியில் வல்லுனராகிய நமது சேக்கிழார் சுவாமிகள் பாடியது பெரியபுராணம். இது இக்கலியுகத்திற்கே பெரியது என்னும் பெயர் புனைந்து பாடிவைத்த நமது நாயனார் சரிதையை புராணம் பாடியவர் விரிவாகவும் விவரமாகவும் சொல்லாது சுருங்கச்சொல்லி விளங்க வைத்தல் என்னுமுறையைக்கொண்டு வெகு சுருக்கமாகவே கதையை முடித்திருக்கின்றார். அவரின் கவிச்சாதுர்யவன்மை நம்மனைவர்க்கும் பெரிதே.

நமது நாயனாரவர்களின் கதையை நாடகரூபமாக எழுதவந்த நான் நாடகரசிகங் குன்றாதிருக்கவும், சபாஜன மனரசிகத்துக் கேற்கவும் "பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவலகால வகையினானே" என்னும் வாக்கியத்திற்கிணங்கவும், நாடகத்திற்கேற்றபடி கதானுசாரத்தைப் பெருக்கி, சிற்சில கற்பனைக் கற்பிதங்களைச் சேர்த்து எழுதியிருக்கின்றேன். நிகழ்காலத்திற்கிது நேர்த்தியாகவே இருக்கும். எனது நாடகாசிரியர் தன்மைக்கும், எனது கவியலங்கார வன்மைக்கும் என்றென்றும் வாடாப் புகழ்கொடுத்துதவிய எனது

குருமூர்த்தியாம் உடுமலைப்பேட்டை, சந்தவண்ணச்சரபம், தமிழ் நாடகத்தலைமை ஆசிரியர், ஸ்ரீமான் உ. முத்துசாமி கவிராயரவர்களின் பாததாமரைக்குப் பக்தனும் சீடனுமான என்னாலியற்றி அச்சிட்டு வெளிவந்த அநேக நாடகங்களையும் நாவல்களையும் வாங்கிப்படித்து மனமகிழ்ந்த சகோதர சகோதரிகள் பலரும் இந்நாடகத்தை வாங்கி வாசித்து இதனலாம் நற்பேறுபெறக் கோருகிறேன். குற்றமிருக்கின் கற்றவர் மன்னிக்கவேணும்.

அன்றியும், இந்நூலின் சகல வுரிமைகளும், சென்னை : மெஸர்ஸ் B. இரத்தின நாயகர் அண்டு ஸன்ஸ் அவர்களுக்கே வுரியதாகலின், மற்றவர்கள் இப்புஸ்தகத்தையேனும், இதிலுள்ள பாடல்களையேனும் அச்சிட்டு வெளியிடில் புஸ்தக ரிஜிஸ்தர் சட்டப்படி சகல நஷ்டத்திற்குமாளாவார்களென்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

13-3-35
சென்னை.

அன்பன்:
கவிராஜ். ச. சு. சங்கரலிங்கன்,
நாடகாசிரியன்.

---

## நாடக நடிகர்கள்:

| | |
|---|---|
| ஞானாதிநாதர் | கதாநாயகர் |
| தெய்வகலாவதி | மேற்படியார் தாயார் |
| அதிசூரன் | சிலம்பாசிரியன் (ஞானாதிநாதரின் தாயாதிகாரன் |
| சுசீலை | மேற்படியான் மனைவி |
| பரமசிவம் | பக்தரட்சகன் |
| கமலா, விமலா | சுசீலையின் தோழிகள் |
| பக்தசிங்கன், திருநாகேஸ்வரன், விஜசேகரன், வீரகேசரி, விநோதபாஷிதன் | ஞானாதிநாதரின் மாணவர்கள் |
| ராஜசிம்மன், பாரதவீரன், குகானந்தன், ராஜேந்திரன் | அதிசூரனின் மாணவர்கள் |
| பரமேஸ்வரபாகவதர் | சதாப்பிரசங்கி |

அர்ச்சகர், அடியார்கள், நடனமாதர்கள், பறையறைவோன் முதலியோர்

நாடகம் நிகழிடம்:—எயினனூர் (சோழதேச கிராமம்)

---

Copy Right and Rights of Translation in any other Languages, strictly reserved by the Publishers.

உ

முருகன் துணை

அறுபத்துமூன்று நாயன்மார்களில்

ஒருவராகிய

# ஏநாதிநாத நாயனார்

## சரித்திர நாடகம்

### விநாயகர் துதி

வெண்பா

பூமிருந்த சோலை புகழ்திருநல் லூரோங்குஞ்
சாமி முருகன் சகோதரா—நேமிமால்
மாமருகா யானைமுகா வாமிமகிழ் பாலாவென்
னோமகற்ற நீயே துணை.

இதுவுமது—விருத்தம்

தினகரனுந் தேவர்களுந் தினம்பணியுந்
திருநல்லூ ரறுப்புக் கோட்டை
ஜனமகிழு மேநாதி நாதகுரு சரிதமதைத்
தமிழிற் பாடு
மனமுதவு மதியுதவு நலமுதவு சுகமுதவு
மார்க்க மேவு
மனவாதச் செல்வவிநா யகன்றாளை
யருச்சித்துப் போற்றுவோ மால்.

### கதாநாதரின் வணக்கம்

வெண்பா

அதிசூர னெற்றி யணிநீற்றைக் கண்டு
மதிசூ டானா மதித்துப்—பதியுயிர்க்
தானாக முக்தி யடைந்த சிவஞானி
ஏனாதி நாதனா ரே.

சீன்—1. இடம்—எயினனூரின் ராஜவீதி.

நடிகர்:—ஏநாதிநாதர், அதிசூரன், பக்தசிங்கன், திருநாகேஸ்வரன், விஜயசேகரன், வீரகேசரி, விநோதபாஷிதன், ராஜசிம்மன், பாரதவீரன், ராஜேந்திரன், குகானந்தன்.

[எல்லோரும் பாடிக்கொண்டு வருகின்றனர்]

பாட்டு

(சலாம் சலாம் சலாமலோ என்ற மெட்டு)

வாரீர் வாரீரென் சிநேகரே
மகிழ்ந்து விளையாடவே
சேரீரொன்ருகவே
சிலம்பவித்தைக் காகவே (வா)

பாரீர் பந்திது பஞ்சாகப் பறந்தோடவே
பராக்ரமம் பராக்ரமம்
பராக்ரமத்திற் கூடவே
தராதலந் தராதலந் தராதல மதிக்கவே (வா)

அதி வ-ம்:—(ராஜசிங்கனைப் பார்த்து) அடா ராஜசிம்மா! நமது சிலம்பக்கூடப் பிள்ளைகளாகிய பாரதவீரன், குஞ்சிதபாதன், குகானந்தன் முதலிய எல்லோரும் வந்திருக்கின்ருர்களா.

ராஜ வ-ம்:—ஐயனே தங்களது சொல்லைத் தலைமேற்கொண்டு ஏவற்புரியும் அவர்கள் யாவரும் வந்திருக்கின்றனர்.

அதி வ-ம்:—மெத்த சந்தோஷம். (ஏநாதியைப் பார்த்து) சகோதரா, ஏநாதிநாதா, உனது சிலம்பக்கூடச் சிறுவர்களும் வந்திருக்கின்றன ரல்லவா.

ஏநா வ-ம்:—(வணக்கத்துடன்) அண்ணு அனைவரும் வந்திருக்கின்றனர்.

விநோ வ-ம்:—(முன்வந்து) எமது குருமூர்த்திகளே! அடியேன் விநோதபாஷிதனும் வந்திருக்கின்றேன்.

அதி வ-ம்:—விநோதா, எங்களுடன் என்றென்றும் நீ இணைபிரியாதிருப்பது எமது வித்யாபி விருத்திக்கழகாகும். அதிருக்கட்டும் இன்றையபோது போக்க எந்த விளையாட்டை யாரம்பிக்கலாம். யோசித்துச் சொல்,

ஏநா. வ-ம்:—ஆமாம் இந்த யோசனைக்குரியவன் நமது விநோதன் தான், உம். விநோதா ஏதோ சீக்கிரம் உனது யோசனையைச் சொல் கேட்போம்.

[விநோத பாஷிதன் சிறிது நேரம் யோசித்து.]

விநோ. வ-ம்—ஆமாம் வாஸ்தவந்தான். எல்லோரும் இப்போதுதான் பழுக்கப்பார்த்து வந்தோம், ஆனதால் அந்தவிளையாட்டிந்த வேளைக்கு சந்தோஷந்தராது.

ஏநா. வ-ம்—அடடே, அப்படிச் சொல்லாதே. எந்த விளையாட்டா யினும் சரி, இது சமயம் விளையாடுவதே உசிதம்

அதி. வ-ம்:—ஆமாமடா விநோதபாஷிதா எதுவாயினும் சரி, சொல் கேட்போம்.

விநோ. வ-ம்:—சொல்கிறேன் கேளுங்கள். ஒருபெரிய தாம்பாளத்தில் ஐம்பது போளி, இருபது லட்டு 60 வடை முப்பது அதிரசம், எண்பது அப்பளம், 25 இட்டிலி, பதினைந்து சோமாஸ், நாற்பது ஜிலேப்பி, இதற்கேற்ற பாயசம், பழம் ஆகிய எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து சாப்பிட்டு விளையாடுவது எனக்குத் திருப்தி யானது. ஆனல் நீங்கள் யாவரும் சற்று முன்புதான் சாப்பிட்டு வந்திருப்பீர்கள். இதுசமயம் இவ்விளையாட்டு உங்களுக்குப் பிடித்தமாயிராதென்று தெரிகிறது. மேல் உங்களிஷ்டமெப்படி.

[எல்லோரும் நகைக்கின்றனர்]

ஏநா. வ-ம்:—இவனிடம் எந்த சமயமும் இந்த விகடமே நிறைந்திருக் கும். (விநோதனைப் பார்த்து) அடே போதுமானது உனது விகட விநோத விளையாட்டு, விலகிநில்.

விநோ. வ-ம்:—பார்த்தீர்களா? அதற்குள்ளாகக் கோபம் வந்து விட் டதே. சிறிது பொறுங்கள். இன்னொரு விளையாட்டுச் சொல்கி றேன்.

அதி. வ-ம்:—முற்றும்யோசித்து முடிவான நானவிளையாட்டொன்றை சொல்லடா.

[யோசித்து]

விநோ. வ-ம்:—சரி உப்புக்குந்தம்: கிளித்தட்டு, குஸ்தி விளையாட லாமா.

ஏநா. வ-ம்:—அதுவுங்கூடாது, அவ்விளையாட்டிற்கிது நேரமல்ல.

அதி. வ-ம்:—மாலைநேரத்தில் நமது காவிரியாற்றங்கரையில் நீ சொல் லிய விளையாட்டுகள் விளையாட மனனந்தமா யிருக்கும்,

விநோ. வ-ம்:—ஆமாம். இது காலைநேரம். இவ்வேளையில் கோலி வி ள யாடுவதே சிலாக்யமானது.

அதி. வ-ம்:—வாஸ்தவந்தான். ஏனாதிநாதா நமது விநோதன் கூறிய படி கோலி விளையாடலாம்.

## ஏநாதி விருத்தம்

கோலிகுண் டாடும்வேலைக் குழந்தைகள் தமக்கேயாகும்
கேலியாம் நமக்கிவ்வேலைக் கிஞ்சிற்று மாகாதண்ணு
காலமே கடத்தவேண்டிக் கருதிய நமதுநெஞ்சம்
போலநற் புராணம்பாடிப் பொழுதினைப் போக்குவோமே.

அதி. வ-ம்:—சிறியோர் விளையாடுங் கோலிக்குண்டாட்டம் பெரியோ ராகிய நமக்குத் தகாதா. மீறியாடினுல் யாராவது நம்மைத் தண் டிப்பாருண்டா.

விநோ. வ-ம்:—இவருக்கு அதனுடைய மகிமை தெரியாது. எந்த சமயமும் புராணம் படிப்பதும், கோயிலைக் கும்பிடுவதுந்தான் முக்கிய வேலையாகும். உம்மை யாரையா இந்தக்கூட்டத்திற்கு வரச்சொன்னது.

ஏநா. வ-ம்:—பின்னுங்களிஷ்டம் வேண்டுமானுல் நான் போய்வரு கிறேன். நீங்கள் விளையாடுங்கள்.

[விஜயசேகரன் முன்வந்து]

விஜ. வ-ம்:—தாங்கள் போவது நல்லதல்ல இஷ்டமில்லையாகில் விலகி யிருந்து வேடிக்கை பாருங்கள். நாங்கள் விளையாடுகிறோம்.

அதி. வ-ம்:—அதுவேசரி, நானும் நாதனும் தனித்திருக்கின்றோம். நீங்கள் இருதாத்தினரும் ஆடுங்கள்.

ராஜ. வ-ம்:—ஆனுல் பந்தயமென்ன வைப்பது?

ஏநா. வ-ம்:—பந்தயம் வேண்டாம். கெலிப்பவர்களே பலாஷ்டிகர்க ளென்பதை மனதிற் கொண்டு விளையாடுங்கள்.

விநோ. வ-ம்:—ஆமாம், சும்மா விளையாடினுல் சுகமிராதென்கின்றூர் களே.

அதி. வ-ம்:—அடே விநோதா வீண்காலம் போக்கி விகடப்ரசங்கம் செய்யாதே. ஏனாதியின் மனப்படியே ஜெயிப்பவர்கள் தீர வான்களென்பது தீர்மானம்.

விநோ. வ-ம்:—நல்லது. வாருங்களப்பா விளையாடுவோம்.

[அதிசூரனும் ஏனாதி நாதரும் தனித்திருக்க இருவருடைய நண்பர்களும் இரண்டு கட்சி யாகப் பிரிந்து விளையாடுகின்றனர்]

## பாட்டு

(ஜாதிரேண்டுதான் என்றமெட்டு)

* ஆடுவோம் கோலி
ஆவலுட னாமனைவருங்கூடி (ஆ)

ஓடிடாமலே ஒளிந்திடாமலே
சாடிசெய்யாமலே சம்மதித்தேயின்று (ஆ)

அடிக்கிறேனைசா பிடிக்கொருபைசா
ஆடுவோம்நேசா ஆனந்தமுடனே (ஆ)

சூரனேனாதி நாதர்மகிழ
நேரினில்நின்று வீரமதாகவே (ஆ)

[எல்லோரும் கெலித்தோம் கெலித்தோமென்று இரைச்ச லிடுகின்றனர். அரண்மனைக் காவலன் அதிவிரைவாக ஓடிவந்து]

காவ. வ-ம்:—பாவியர்களே! சத்தமிடாதீர்கள், மஹாராஜா சுவாமி சந்நிதானத்திற்கு வருகின்றார். இது சமயம் இராஜ வீதியில் உங்களது கூட்டமும் ஆட்டமும் கூடாது. தயவுசெய்து தத்தம் விடுதிக் கேகுங்கள்.

அதி. வ-ம்:—அரசர் வருகிற சமயந்தான் வாருங்கள் போகலாம்.

ஏனா. வ-ம்:—அண்ணா நாங்கள்போய் வருகின்றோம். [போகின்றனர்]

(சீன்முடிவு.)

---

சீன்—2. இடம்—எயினனூர் சிவாலயம்.

நடிகர்:—ஏனாதிநாதர் தெய்வகலாவதி, அர்ச்சகர், அடியார்கள்.

[சுவாமிக்கு தூபதீப நைவேத்தியம் நடக்கிறது அடியார்கள் வருகின்றனர்]

## அடியார்கள் பாட்டு

(கண்டேன்கோபாலா என்ற மெட்டு)

பல்லவி

ஈசா ஜெகதீசா எயினனூர் வாசா
சித்வி—லாசா வுமைநேசா பிரகாசா நடேசா (ஈசா)

---

* ஒவ்வொருவரும் தனித்தனிப்பாடலாம்.

அநுபல்லவி

தாசானுசாரனே சமஸ்தாதிகாரனே
சரணகதியேதருவாய் அருள்புரிவாய் (ஈசா)

சரணம்

வேதத்தமர்ந்தவா விபூதியானவா
விஷவாபரணம்பூண்டவா எமையாண்டவா (ஈசா)
சங்கரலிங்கேஸ்வரா சகலபுவனுதரா
சமயமீதெம்மையாளவா ஆலமுண்டவா (ஈசா)

[அர்ச்சகர் விபூதிதரப் பெற்று அடியார்கள் செல்கின்றனர் ஏநாதி நாதரும் தெய்வகலாவதியாரும் வருகின்றனர்.]

## நாதனுர் பாட்டு

(கார்த்திகேய காங்கேய என்ற மெட்டு)

பல்லவி

தேவதேவமஹா தேவனுனசிவமே தேனுறுமெயினனூர்(தே)

அநுபல்லவி

மாவிநோதமுடி மேவுசோதிமதி
மானுங்கரத்திற்புலித் தோலுமிடையிலணி (தே)

சரணம்

அரனே கங்காதரனே அடிமை எமைக்காவாய்
அருள்தரவிது ததிவாவா
வரமார்சங்கர லிங்கஜோபித
வாமனுவதார வேதனிதந்துதி (தே)

## வேறு தேவாரம்

சோதியாய் சொரூபமாகி சுயம்பிர காசமாகி
நீதியாய் நிமலனுகி நிஷ்களா னந்தனுகி
மாதுமை பாக னுகி மதிநதி யணிந்தோ னுகி
பூதிசே யெயின னூர்வாழ் புண்ணியா போற்றி போற்றி.

[அர்ச்சகர் விபூதிதரப் பெற்று அன்னேயுடன் ஆலயஞ் சுற்றிவந்து நூஜஸ் தம்பத்தைச் சேவித்து இருவரும் அமர்கின்றனர்.]

தெய்வ வ-ம்:— அப்பா! ஏநாதிநாதா, நமது பாவஜென்ம விமோசனப்பலன் பெற்றுய்யவும், உன்னைப் பெற்ற பிதாவானவர் உனதிளம்பிராயத்தில் என்னைப்பிரிந்து மூர்த்தி தலம் தீர்த்தம் என்னும் யாத்திரைக்குச் சென்றவர் இன்றுவரை வராதிருப்பதை முன்னிட்டும், பிரதிதினமும் நம்பெருமானைப் பணிந்து, அடியார்களுக்கு அமுதுபடைத்து வருகிற விரதத்தைக் கைக்கொண்டேன் என்பதை இன்றுனக்குச் சொல்லிவிட்டேன். தினந்தோறும் எனது பிதா எங்கே எங்கே என்று நீ விசாரித்த வுண்மை இதுதான்.

ஏநா வ-ம்:— ஏனம்மா! எனது பிதா நம்மிருவரையுந் தனி விடுத்து க்ஷேத்திர யாத்திரைக்குச் சென்றார் என்றால் தங்கள் மீதுற்ற கோபமா. அல்லது நான்பிறந்த ஜென்மலக்னசாரமா.

தெய் வ-ம்:— அவருக்குக் கோபம் வரக்கூடிய வகையில் நான் நடந்திருக்கமாட்டேன் நீ பிறந்த நட்சத்திர லக்னபலன் அவர் பக்தி மார்க்கத்தி லீடுபட்டு, பலபலதேவாலய நகரானுகி பரகதியடைவாரென்றும் நீயும் பக்திமார்க்கத்தி லீடுபட்டு வெற்றி வீரப்ரதாப மோட்ச சாம்ராஜ்யம் பெறுவா யென்று உனது சாதகங் கணித்த சோதிடர்களின் சொற்படியே அவர் நம்மைப் பிரிய நேர்ந்தது.

ஏநா வ-ம்:— நல்லது. அம்மா என் தகப்பனார் எத்தொழிலி லீடுபட்டிருந்தார்?

தெய் வ-ம்:—அப்பா நமது, அரசர் குலாசாரப்படி அரசகுமாரர்களுக்கு அவர் வாட்போர் பயிற்சி செய்வித்து அதன் மூலம் வரும் தனத்தைப் பெற்றுக் குடும்பப் பாதுகாப்புப் புரிந்து நமது பிற்கால ஜீவியத்துக் கேற்ற வுதவியுஞ் செய்து வைத்திருக்கின்றார்.

ஏநா. வ-ம்:— ஆனால் நமது அண்ணா அதிசூரர் என்பவர் யார். அவரும் இவ்வித்தையைக் கைக்கொண்டு சிலம்பக்கூடம் வைத்த காரண மென்ன?

தெய். வ-ம்:—உனது பிதாவின் தாயாதியின் குமாரன்தான் அதிசூரன். ஆதியில் உன் தந்தையும் அதிசூரன் தந்தையுமே இவ்வாட்போர் பயிற்சியை சமஸ்தான சிலம்பாசிரியர்களா யிருந்து அரச குமாரர்களுக்குக் கற்பித்து வந்தனர். பின்னர் அதிசூரன் தந்தை இறந்தபின் தந்தைக்குப்பின் மகன் என்ற சொற்கிணங்க அதிசூரனும் அதே தொழிலி லீடுபட்டிருக்கின்றான். உன் தந்தைக்குப் பதிலாக நீயும் அந்த உத்தியோகத்தையே வகித்திருக்கின்றாய். இதுவே நமது குடும்பத்தின் முக்கிய விஷயம்.

ஏநா. வ-ம்:—தாயே! எல்லாந்தெரிந்தேன். இனி எனது பிதா எங்கிருக்கினுந் தேடிப் பார்த்தழைத்து வருமார்க்கஞ் செய்கிறேன் அன்றியும்,

மகன்றந்தைக் காற்றுமுதவி—இவன்
தந்தை எந்நோற்றான் கொல்

என்னும் ஆன்றோர் வாக்கியப்படி எனது பிதாவின் பெயர்துலங்க தங்களாசீர்வாதப் பெருக்கால் நானும் எனது வாட்போர் பயிற்சியையும், சிலம்பக்கூடமாணவர்களின் அபிவிருத்தியையும் அதிகரிக்கச் செய்து அரசசன்மானமும் வாங்கித் தருகிறேன்.

தெய். வ-ம்:— குழந்தாய் சொன்னபடி செய்வாயென்பது எனக்கு முன்னமே தெரியும்.

[அர்ச்சகர் வந்து]

அர். வ-ம்:—அம்மா! உச்சிவேளையாகிறது. ஆலயத்தை சாற்றிக் கொண்டு நான் விடுதிக் கேகவேண்டும் தயவுசெய்து வெளியேறுங்கள்.

தெய். வ-ம்:— சுவாமி! குழந்தையுடன் இவ்விடத்தில் சிறிது தனித்துப்பேசநேர்ந்தது. சம்பாஷணையால் நேரமானது தோற்றவில்லை. மன்னிக்கவும். போய் வருகின்றோம்.

[செல்கின்றனர்]

(சீன் முடிவு)

---

சீன்—3. இடம்:—காவிரிக்கரை.

நடிகர்:—பரமேஸ்வர பாகவதர், ஏனைய பிரஜைகள், ஏநாதி நாதர்.

[எல்லோரும் அமர்ந்திருக்க பாகவதரெழுந்து]

பாக. வ-ம்:—நமப்பார்வதீபதயே.

எல். வ-ம்:—அரஹர மஹாதேவா.

பாக. வ-ம்—சபாதிபத்ய சகோதரர்களே! "தண்ணீருங்காவிரியே, தார்வேந்தன் சோழனே,—மண்ணாவதுஞ் சோழ மண்டலமே, என்றும், "சோறுடைத்து சோணாடு" என்றும்,

"வெண்ணாறதுவடக்காம் மேற்குப் பெருவெளியாந்
தெண்ணார் புனற்கன்னி தெற்காகும்—வுண்ணிய
ஏணாட்டுப் பண்ணை இருபத்து நாற்காதம்
சோணாட்டுக் கெல்லையெனச் சொல்":—

என்றும் பலபல பெரியாரின் பாடல் மகிமை வாய்ந்தது நமது சோழதேசம். இத்தேசத்திலே தான் நமது சிவபிரானின் மகத்துவத் திருவிளையாடல்களனந்தம், எனினும் எல்லாம்வல்ல நமது எம்பிரானை வழிபடுவதெங்ஙனம், இது சாமான்யமல்லவே என்று சகலருஞ் சஞ்சலமடையக் கூடும்.

முப்பத்து முக்கோடி தேவர்களாலும், நாற்பத்தெண்ணாயிர மகரிஷிகளாலும் மற்ற கருடகாந்தர்வ சித்யவித்யாதர திக்பாலர்களாலும், பிரம்மவிஷ்ணுக்களாலுங் காணற்கரியாதாய்,

“இகபரமிரண்டினிலு முயிரினுக்குயிராகி
எங்குநிறைகின்ற பொருளாய்:—
கருதரியசிற்சபையி லானந்தநிர்த்தமிடு
கருணாகரக் கடவுளாய்:—
பார்க்குமிடமெங்குமொரு நீக்கமறநிறைகின்ற
பரிபூரணானந்தமாய்:—
தெரிவதற்கரிய பிரமமாய்அமல
சிற்சுகோதயவிலாசமாய்:—
சர்வபரிபூரண வகண்டதத்துவமான
சச்சிதானந்தசிவமாய்:—
உலகெலா முணர்ந் தோதற் கரியதாய்
நிலவு லாவிய நின்மல மேனியாய்
அலகில் சோதியாய் அம்பலத் தாடியாய்”:—

எல்லாம்வல்ல சித்தனாய் நின்று நம்மை யாட்கொள்ளும் திருவுருவம் பெற்று, அப்பு, தேயு, வாயு, ப்ருதிவி, ஆகாயம் என்னும் பஞ்சபூத வடிவாய், பஞ்சாக்கரமாய் இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி, சிற்சக்தி, பராசக்தி என்னும் பல சக்திவடிவாய் நின்றுலவும் எம்பெருமான் தேகத்தின்மீது ஜ்வலிக்குந் திருவெண்ணீற்றைப் பக்தியுடன் புனைவோமாகில் பரமனது பாதாரவிந்த முக்தி மோட்ச சாம்பிரதாயத்துக் கது வழிகாட்டியாக நிற்கும்.

எனினும் இவ்வெண்ணீற்றை, அல்லதிவ் விபூதியை, அல்லதித் திருநீற்றை, சாமான்யமாகக் கருதவேண்டாம். இது,

## பாட்டு தேவாரம்

மந்திரமாவதுநீறு வானவர்மேலதுநீறு
சுந்தரமாவதுநீறு துதிக்கப்படுவதுநீறு
தந்திரமாவதுநீறு சமயத்திற்காப்பதுநீறு
செந்திருவாயுமைபங்கன் திருவாலவாயான்திருநீறே. (மந்)

என்றும், "பூதியணியாதவரின் புக்திசுடுகாடு" அருநோய்கள்கெட வெண்ணீறணியாராயின், "வேலேந்திய முருகாவெனவெண்ணீறணிவீரே" என்றும்:—

"ஆதிபகவன் ஞானவடி வழவிற்பூத்து நித்தியமாய்
அணிந்தோர் தமக்கு ஆதாவாய் அருந்தி னோர்கட் காரமுதாய்
நீதியறியும் பசுமலத்தை நீக்கு மொருநற் குறிகாட்டி
நிகழ்பே ரின்பக் கடலூட்டி நின்றப் புகழ்வெண் டிருநீறே."

என்றும் ஆன்றோர்களாலும சான்றோர்களாலும் பக்தி விநயத்துடன் கொண்டாடப்பெறும் நமது பரமேஸ்வரன் இவ் வெயினனூர் வாழும் உமாமகேஸ்வரனது விபூதியை தினந்தோறும் நெற்றியிலணிந்து ஸ்தோத்தரிப்பவர்களுக்கு சகலவித தோஷ நிவாரணமாகி சந்தோஷகரமான சுகச்செல்வம் பெற்று தனவந்தனராய் சகலகலா வல்லுனராய் சாமர்த்திய தைர்ய புருஷராய் தீர்க்காயுளுடன் வாழ்வார்கள். என்ற விபூதி மான்மியவிளக்கத்தை வெகு சுருக்கமாகவே இன்றுங்களுக்கு எடுத்துரைத்தேன். ஆதலின் நமது சிவானுபூதி செல்வர்களாகிய நீங்கள் யாவரும் ஆலவாயென்னும் மதுரையம்பதியில் ஸ்ரீ சோமசுந்தா மூர்த்தியால் செய்தருளிய அறுபத்து நான்கு திருவிளையாடலில் பாண்டியனது சுரந்தீர்த்த படலத்தில் விபூதியின் மகிமையை நன்கறியலாம். சமணசமயத்தி லீடுபட்ட பாண்டியனும் ஏனைய மந்திரி பிரதானியர் முதலாகிய பிரசைகளும் விபூதியை அணியாது காலம் போக்குங்கால் பாண்டியனுக்கு சுரம் என்னும் தீச்சுவாலை வியாதி கண்டு மெய்வருந்தி பலவித சிகிச்சையிலும் பயன் படாமலும் சமணர்களது வைத்திய அவுஷதங்களிலும் சுரம் விலகாமலும் மென்மேலும் சகிக்க முடியாது வருந்தும் பாண்டியன் மனைவியான மங்கையற்கரசி யம்மையின் வேண்டுதற் கிணங்கி திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் அங்கெழுந்தருளி,

"மந்திரமாவதுநீறு" என்னும் பதிகத்தைப்பாடி பாண்டியன் தேகத்தில் விபூதியைத் தடவியதும் அரசன் சுரம் நீங்கிச் சுகம்பெற்று சமணமதத்தை விலக்கி விபூதியைக் கைக்கொண்டு விளங்கினன். சமணர்களும் தோல்வி யுற்றனர். இத்தியாதி மகிமை பொருந்திய,

## பாட்டு

இராகம்-மத்யமாவதி, தாளம்-ஆதி

பல்லவி

ஜோதிப்ரகாசவிபூதி தனைத்
துதித்துமெய்யணிகுவீர் (ஜோ)

அநுபல்லவி

ஆதியந்தமில்லாத அரனர்தனக்கொருபிரக்யாதி
ஆமாம்நம் எயினனூர்வளர்
அந்தரங்கசங் காலிங்கப்ரீதி (ஜோ)

சரணம்

வேதமுமதுவே விரதமுமதுவே
விஷ்ணுபிரம்மசிவ போதமுமதுவே
சாதகமாம்சைவ சமயமுமிதுவே
சஞ்சலந்தீர்க்கும்பஞ் சாக்ஷரமதுவே (ஜோ)

வ-ம்:—இதுமுதல் எயினனூர் வாசிகளாகிய நீங்கள் அனைவரும் இவ் விபூதிப் பெருமையைக் கைக்கொண்டு அதனலாம் நற்பேறு பெறக்கோருகிறேன். நமப்பார்வதீபதயே.

எல்லோரும். வ-ம்:—அர ஹர மஹாதேவா.

[சபை கலைகிறது. சகலரும் சென்ற பின் ஏநாதிநாதர் தனித்துநின்று]

ஏநா. வ-ம்:—ஆ! ஹா! என்னே நமது விபூதிமகிமை எவராலும் அள விட்டுச் சொலற்கரியதான இத்திருநீற்றிலன்றோ எம்பெருமான் வீற்றிருக்கின்றார். இலதேல் இவ்வெண்ணீற்றையே பெரிதென மதித்து வேதியர்முதல் மற்றேனையோரும் விதிப்படிபூசி மேன் மையடைவார்களா? பஞ்சாக்கரமாகிய வெண்பொடியை நுத லணிந்து,பஞ்சாக்ஷரப் பதிகம்பாடியதும் இதன்பொருட்டாகவே இருந்திருக்கவேண்டும்.

## பாட்டு தேவாரம்

துவுநாளுணர் வழியுநாளுயிர் போகுநா ளுயர் பாடைமேல்
காவுநா ளிவை என்றலாற்கரு தேன்கிளர் புனற் காவிரி
பாவுதண்புனல் வந்திழிப் பரஞ் சோதிபாண்டிக் கொடுமுடி
நாவலா வுன்னை நான்மறக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே

வ-ம்:—ஆமாம் இதனுட்பொருட் கருத்தை இன்றே தெரிந்தேன். "சிவாயநம, நமச்சிவாய, என்னும்பதங்களை வுச்சரித்து, விபூதி யணிந்து வரும் மெய்யடியார்களுக்கு மெய்யன்புடன்வுபசரித்து, அவர்களுக் கேற்ற அன்னதானம் செய்து வருவதே எனது கடமை என்பதை இன்றுமுதற் கைப்பிடித்தேன். இது வுண் மை, எவ்விதமெனில்.

பாட்டு

(ஓதிருநல்லூர் வளரோய்யாரா என்றமெட்டு)

கண்ணிகள்

ஆதியரன் மீதொளிர்வி | பூதி சி
வாகமத்தி லேநிறைந்த | நீதி பஞ்
சாக்ஷரம் படர்ந்ததெய்வ | ஜோதி தன்னை
யதிமதுரித | முடனனுதின
முடல்முழுவது | மணியடியவர்க்
கானதுவெலாமளிப்பேன் | சத்தியம் எனக்
கானதிந்த வேலையது | நித்தியம் (ஆ)

ஓதுவேன் நமச்சிவாய | கீதம் என்
னோடுவருஞ் சீடருக்கிப் | போதம் செய்து
ஓங்குபுகழ் தாங்குவதே | நீதம் நல்
லுபதேசிக | ளெனுமாதவர்
பதமானது | சிரமீதுற
ஒருமனதா யதிதிபூசை | புரிவேன் கோரும்
பொருள்களெலா மவரவர்க்குத் | தருவேன் (ஆ)

வெண்ணீறணி யாதவரை | வெறுப்பேன் திரு
வெண்ணீறினை யுண்ணீரெனக் | கொடுப்பேன் ஞான
வெண்ணீறினை கண்ணுமெனத் | துதிப்பேன் பல
விறல்மேவிய | பகையாளிக
ளெவராயினுந் | திருநீறொடு
வீதிவரக் காணில்நமஸ் | காரம் செய்யும்
வேலையெனக் கானவிரத | சாரம் (ஆ)

[போகின்றார்]

(சீன் முடிவு)

---

சீன் —4. இடம்—,நாதனார்வீடு.

நடிகர்:—நாதனார், தேய்வகலாவதி, அடியார்கள்.

[அடியார்கள் பந்தியமர்ந்திருக்க நாதனாரும் தாயாரும் சாதம் பரிமாறியபின் எல்லோரும் விபூதி கொடுக்க வாங்கி யணிந்து அடியார்கள் பாடுவது]

## அடியார்கள்—பாட்டு

(அரிஹரி மாதவ என்ற மெட்டு)

பல்லவி

அரஹர சிவசிவ அம்பலவாணா
அரவாபரணா அருமலர்சரணா (அ)

அநுபல்லவி

விரதவிபோதா வேதவிநோதா
வித்வசங்கீதா விமலரஹிதா
வேண்டுமெமக்கருள் தாதா (அ)

சரணம்

தேவர்க்காதாரா தேவிமனோகரா
தேசோபகாரா சின்மயப்பேரா
தேன்சொரி எயினனூரா (அ)

[பாடல் முடிந்ததும் அன்னம் புசித்து விபூதிப்பை ருத்ராக்ஷ மாலை, காவிவஸ்திரம் பெற்று அடியார்கள் செல்கின்றனர்]

(சீன் முடிவு)

---

குறிப்பு:—இந்த சீனில் அடியார்களாக வருபவர்கள், தனித்தனியாக ஒவ்வொரு சிவஸ்தோத்திரக் கீர்த்தனைகளைப்பாடி வரலாம்.

சீன்—5. இடம்:—அதிசூரனின் சிலம்பக்கூடம்.

நடிகர்:—அதிசூரன், ராஜசிம்மன், பாரதவீரன், ராஜேந்திரன், குஞ்சிதபாதன்.

[அதிசூரன் ஆசனத் தமர்ந்திருக்க சிஷ்யர்கள் பாடுதல்]

## பாட்டு தர்க்கம்

(நமது நாடுகளில் என்ற மெட்டு)

கண்ணிகள்

சீடர். திருவுலாவுமெங்கள் குருவதாகிவளர்
சிலம்பசாஸ்த்ர மணியே
சிரம்வணங்கி இரு காங்குவித்து பதஞ்
சேவித்தோமித் ததியே (திரு)

அதி. அருமைமேவுமன — தொருமையான சுக
ஆசீர்வாதம் — புரிந்தேன்
அருகமர்ந்து சமர் — தொழில்தெரிந்து சுக
மாயிருப்பீர் — வளர்ந்தே (அரு)

சீடர். இடைவிடாது உம — தருகிருந்து சொலு
மேவலைப் — புரிகுவோம்
ஏறுலாவுவாட் — போரின் வித்தைமுறை
யாவையுந் — தெரிகுவோம் (இடை)

அதி. படைவணங்கு சுப — ஜெயமிலங்கு புகழ்
பரவுமாண — வர்களே
பாடமேவு பள்ளிக் — கூட வாள்வித்தையை
பகர்வேனதிரு — வீர்களே (படை)

வ-ம்:—சீடர்களே. உங்களது வந்தனோபசாரமும், குருபீடத்தை வழிபடுதீரமும், என்மனதைக் குதூகுலப் படுத்தியது. என்றென்றும் என் ஆசீர்வாதம் உங்களைக் காத்தருளுமாக எல்லோரும் அமருங்கள்.

[சகலரும் ஆசனத்தமர்கின்றனர்]

அதி. வ-ம்:— நேற்றையதினம் மாலைநேரம் காவிரியாற்றில் உங்களுக்கும் ஏநாதிநாதனது மாணவர்களுக்கும் நடந்த விஷயமென்ன?

பாரத. வ-ம்:—நவமி மகோற்சவ வழக்கம்போல் மஹாராஜா நேற்று மாலை ஆனைமீதாரோகணித்து பவனிவரும் சமயம், நாங்களும் நாதனுருடைய மாணவர்களும், சிலம்பம் விளையாடிச் சென்றோம்.

அதி. வ-ம்:—அதுசமயம் ஏநாதிநாதனும் அங்கிருந்தானா?

குஞ். வ-ம்:—அவரில்லை அவருடைய மாணவர்களில் முதன்மையான வீரகேசரி யிருந்தான்.

அதி: வ-ம்:—நல்லது மேல்நடந்த விவரமென்ன.

ராஜ. வ-ம். அந்த வீரகேசரி என்பவன் நாங்கள் சிலம்பம்விளையாடி வருவதையும் கவனியாது அவன்செய்த காரியத்தையும், பவனிவரும் அரசர் முன்னிலையிலும்,

## ராஜேந்திரன் பாட்டு

(காந்திரிஷி என்ற மெட்டு)

நடந்ததையே சொல்ல — நாணமாகுதே அங்கு (நட)

படர்ந்தவாளாயுதத்தைப் — பந்துருண்டைபோல்வீசி
பாய்ந்ததைக்கைப்பிடித்து — பவனியானைமுன்னடுத்து

இடம்விட்டிடம்பெயர்த்து இராஜர்மக்கள்முன்குதித்து
இருபத்தொருபனிரெண் டென்னும்பலகந்துவந்து
எக்களித்தான் சீறிக் கொக்கரித்தான் அங்கு (நட)

தொகையரா

பாரரசர் பலருமதைப் பார்த்து ஏநாதியின்
பராக்ரமத்தைப் புகழ்ந்தார்
சீராகநாங்கள் விளையாடுவதைக் கண்டவர்கள்
சிறுவர்விளை யாட்டி தென்றார்

பாட்டு

ஜெயமவர்க்கே அபஜெய மெங்கட்கே அங்கு (நட)

தொகையறா

அரசாங்க மரியாதை முதலான விருதெலாம்
அவர்களே முன்வாங்கினார்
முரசார்ந்த நமதருமை மாணவர்களாம் நாங்கள்
முகம் வேர்த்துப் பின்வாங்கினோம்

பாட்டு

முறுவலிட்டார் யாரும் அறுவறுத்தார் அங்கு (நட)

வ-ம்:—மஹாராஜாது பவனிக்கு முன்னிலையில் நாங்கள் சிலம்பம் விளையாடிக்கொண்டு வருந்தருணம், நாதனாரின் மாணவனான வீரகேசரி என்பவன் எங்களுத்திரவுபெறாமலும், இராஜகட்டளையில்லாமலும், தான் தோன்றித் தம்பிரானாக முன்வந்து ஓர் வாளாயுதத்தை எடுத்து அதை மேலே வீசி எறிந்து, அதன் மேற் பாய்ந்து பிடித்து, அந்தரடித்து, மகாராஜாவின் யானை முன் குதித்து, முன்கந்து பின்கந்து என்னு முப்பத்திரண்டு கந்துபாய்ந்து, கற்றவித்தை யைக் காட்டினான்.

அரசரும், அரசகுலத்தவரும், ஏனையவரும் அவனையும் அவனது குருவான ஏநாதிநாதரையும் புகழ்ந்தார்கள். அதன்பின் நாங்கள் விளையாடியதைக் கவனிப்பாரில்லை. பவனித்திருவிழா முடித்து அரசர் அரண்மனைக்குத் திரும்பும் சமயம் முதல் மரியாதைக், காளாஞ்சி, முதலியவற்றை ஏநாதிநாதர் மாணவர்களுக்கே அரசர் கொடுத்தார்.

இந்த அவமானம் சகியாது நாங்கள் பின் மரியாதைப்பெறாது வந்துவிட்டோம். இதேவிசனமாக நமது சிலம்பகூடத்தின் உபதலைவனாகிய ராஜசிம்மனும் இன்றிதுவரை வராமலிருக்கின்றான்.

[ராஜசிம்மன் விசனக்குறியுடன் வருகிறான்]

அதி. வ-ம்—அப்பா, ராஜசிம்மா, குழந்தாய்! எதற்காக இன்றிவ்வித சோகக்குறியுடன் வந்து நிற்கின்ருய்.

[ராஜசிம்மன் அதிசூரனைக் கும்பிட் டெழுந்துநின்று]

## விருத்தம்

திசைபுகழ் எயினினூரைச் சேர்ந்தொளிர் நவமிப்பூசை
விசைபெறு நேற்றுமாலை மேவுங்கா வேரியோரம்
உசிதமோர் சோழராங்கு உயர்ந்ததோர் பவனிவந்தார்
நிசமிது சிலம்பமாடும் நேர்மைக்கே நாங்கள்சென்ருேம்.

வ-ம்:—பிரதிவருஷப் பிரபாவத்தையொட்டி, நவமிவிழாவில் தினசரி அரசர் பவனிவரும் சமயம் நாங்களனைவரும் சென்றிருந்தோம். வழக்கப்படிக்கு ஏனாதிநாதனுரின் சிலம்பக்கூட மாணவர்களும் வந்திருந்தனர். எல்லோரும் இராஜவிடுதிக்கேசென்றிருந்தோம்.

குறித்த நேரத்தில் அரசர் பட்டத்து யானைமேல் பவனி வந்தார். முறையே வாத்தியங்களும் சதுர்க்களும் நடந்து சென்றன. கிரமப்படி நாங்களும் சிலம்பவித்தையைச் செய்து கொண்டு சென்ருேம். ராஜவீதிகடந்து ஆற்றுக்குத்திரும்பும், வீதியில் பவனி வரும் சமயம் ஏனாதி நாதரின் முதற்சீடனை வீரகேசரி என்பவன் இராஜானுமதியின்றியும், எங்களுடைய வுத்தரவின்றியும், வாளொன்றைக் கையேந்தி, அவன்செய்த அட்டகாசத்தை என்னுற் சொல்ல முடியாது. பின் நடந்ததை நமது ராஜசிம்மன் விவரமாகச் சொல்லி யிருப்பான்.

வயதிலும் பெரியவர் முறையிலும் பெரியவர், வித்தையிலும் பெரியவர், தாங்களென்பது இச்சோழ தேசமறிந்த விஷயமே, எனினும் நமது சோழராஜாதிபதி தம்மைமதியாது, எவனே ஒருவன் கத்தியைக் கையேந்தி கதித்தானும், குதித்தானும், பாய்ந்தானும், அவனைப் பெரிதாக மதித்து, தலைவராகிய தங்களையவமதித்து வருஷ விழாவான நவமிக் கொண்டாட்டத்தில் விஜயமுரசதிர நமக்குக் கொடுக்கும் முதன் மரியாதையை ஏனாதிநாதர் சிலம்பக்கூடத்துப் பிள்ளைகளுக்களிப்பதென்ருல் இதைவிட நமக்கு வேறவமானம் வேண்டுமா?

பாரத. வ-ம்:—ராஜேந்திரரே! தமக்குக் கோபம் வேண்டாம். தயவு செய்து இது சமயம் நமது குருமூர்த்தி எனக்கொரு வார்த்தை சொல்வாராகில் ஏனாதிநாதன் தலையை, இவரது காலுக்கபிஷேகஞ்செய்யக் கொண்டு வருகிறேன்.

ராஜ. வ-ம்:—அட பயித்தியக்காரா! சற்றுப் பொறடா நம்மாசிரியர் மனம்வைத்தா லாகாதகாரியமேதடா, என்னடா. நமக்கு ராஜ மரியாதை இல்லாவிட்டால் நம்பெயர் மழுங்குமா......அடே நமக்கென்னடா குத்தி எடுத்தாலும் சம்பா, குப்பையிற் போட்டாலுந் தங்கம். அவன்பேரைப்பார். ஏநாதி. நாதியற்ற பயலுக்கு ஏநாதி பட்டம். வீரமுற்ற நமது குருமூர்த்திக்கு அதிசூரர் பட்டம். இதில் தெரியவில்லையா? அவர்களது பவிசு.

அதி வ-ம்:—அப்பா சிறிது பொறுங்கள். தற்சமயம் நீங்கள்சொல்லி வருவதெல்லாம் உண்மையே. எனினும், எனது தாயாதியான என் தம்பி ஏநாதிநாதன் தலையெடுத்து சிலம்பக்கூடம் வைத்த நாள்முதல் எனக்குப் பெரிய அபகீர்த்தியே நேர்ந்து வருகிறது. அதன் காரணம் எனக்கே தோன்றவில்லை.

ஏகதேசமாக எயினனூர் வாசிகள் சகலரும் ஏநாதியையும் அவனது வாட்போர் சாமர்த்தியத்தையும், அச்சிலம்பக்கூட மாணவர்களின், மேன்பாட்டையும் குறித்துப் பேசிவருவதும் எனக்குத் தெரிந்ததே.

எனினும், முன்னோனுக்குப் பின்னோன் தணிவு, என்றபடி அவனது சிலம்பாசிரியத் தன்மைக்கும்,எனது வித்வப்பயிற்சிக்கும் வித்தியாசமுண்டு. உயரப்பறந்தாலும், ஊர்க்குருவி பருந்தாமா, ஒயிலான சிறகைவிரித்தாடினும் வான்கோழி மயிலாமா, காகஞ்சருநிறமாயினுங் குயிலாமா. என்பதுபோல், ஓர் வமிசத்திற் பிறந்த தாயாதித்துவமுடையவன் ஏநாதியாயினும், எனது வல்லமையும், எனது வாட்போர் சமர்த்தும், அவனுக்குண்டாமா?

சமர்க்களப் பாடம்வேறு. சபையலங்காரப் பாடம் வேறென்னும் பாகுபாட்டை யுணராது நமது மகாராஜா, நவமி உற்சவங்கொண்டாடுமித்தினத்தில் முறைப்படி நமக்குச் செய்யும் மரியாதையைத் தடுத்து, சாதாரணமாக அலங்காரப் பாடம் விளையாடிய அந்த வீரகேசரியை மதித்து அவனுக்கெப்படி முதல் மரியாதை தருவார்.

பார. வ-ம்:—எய்தவனை விட்டு அம்பை நோகுங்கதையா யிருக்கிறது தாங்கள் கேட்கக்கூடிய கேள்வி. தமக்கு பின்னால் சிலம்பக்கூடம் ஆரம்பித்த தமது தாயாதியாகிய ஏநாதிநாதன் ஏற்பட்ட அந்நாள்முதல் இந்நாள்வரை தமக்கு ராஜ மரியாதையுண்டா? அல்லது ராஜ சமஸ்தான தர்பார் அழைப்புண்டா? அல்லது அரசரது அரண்மனையில் நேரும் சுபாசுபகாரியங்களுக்காவது தங்களுக்குத் திருமுகமுண்டா. எல்லாமந்த ஏநாதி என்னும் சந்யாசிக்கே.

தாங்களே இவ்வளவு காரியத்திற்கும் அவனுக்கு இடங்கொடுத்து விட்டு, நேற்று நடந்த நவமித் திருவிழாவில் முதல் மரி

யாதை இல்லை என்று முறையிட்டுக் கொள்வதிற் பிரயோசன மென்ன?

அதி. வ-ம்:—பாரதசிம்மா, நீ சொல்வதுஞ்சரியே. அதாவது "நாடி யறிந்து சொல்லுங்கௌளி, காடிப்பானையில் விழும்" என்னுங் கதைக்கிடாக, எனது வாட்போர் வித்தைக்கு எதிரிட்டுவரும், வீரதீரர்களெவரு மில்லையாயினும், வினைவிதி என்னும் வேற்றுமைப் பிரிவோ, அல்லது காலக்ரக சூழ்ச்சியோ, அன்றி என் மாணவர்களாகிய தங்களது அதிஷ்டபலமோ, இல்லை என்றால் எனது தாயாதியாகிய அவ்வேநாதி நாதனின், தற்கால குருமகாதிசையோ, வேறெக்காரணமோ எனக்கொன்றும் விளங்கவில்லை. இருக்கினும்,

## பாட்டு

(நிச்சயமாய்த் தீர்க்கக்கடனுக்கு என்ற மெட்டு)

பல்லவி

தாயாதியாமேநாதி நாதன் சிலம்பவேலை
தன்னைமதிக்கின்றாரே சோழமன்னர் (தா)

அநுபல்லவி

மாயமீதென்ன சூழ்ச்சி வாள்வித்தையின் பேராக்ஷி
மதிக்குந்தேச ராஜாக்கள் துதிப்பதுவே கண்காட்சி (தா)

சரணம்

வாள்வித்தை வருமானங் கால்நடைக் காகவில்லை
வளர்கின்ற ஏநாதி நாதன் செல்வம்
தோள்வலி யிருந்தென்ன சூரனாய்த் திரிந்தென்ன
ஆள்புடை சூழ்ந்துமென்ன ஆதிக்கமான எந்தன் (தா)

எனது சிலம்பக்கூட மிருளடர்ந்து காணுதே
எதிரில் தாயாதிசாலை இனி தோங்குதே
மனதிற் கிசைந்தசீடர் மதகெஜம் போலிருந்தும்
மதிப்பில்லைமன்னர்பேட்டிக் கழைப்பில்லைவாட்போராட்டி (தா,

வ-ம்:—சோழதேச பரிபாலன அரசர்களும், அரசகுமாரர்களும், மகாப்ரபுடீகர்களும், நாளடைவில் நாதனின் பெயரையும் பெரியதாக மதித்துப் பேசி வருகின்றனர்.

வருமானமும் அரசாங்க முதற்பரிசும் அவனுக்கே நடந்து வருகின்றது. அன்றியும் அரசமாளிகையின் சுபாசுபகாரியங்களில் நடக்கும் வைபவ வரவழைப்பும் முதலாக அவனுக்கே வருகின்றது. அவனது சிலம்பக்கூடம், ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரியின் கொலுக்கூடம்

போற் பிரகாசிக்கின்றது. நமது சிலம்பக்கூடம், குருவை மறந்த மாணவனது கியாதியைப் போன்று, பேரும்பெருமையுங் குறைந்தே வருகின்றது.

இதிருக்க, சிலம்பவித்தையான மற்போர், விற்போர், வாட்போர், கோல்ப்போர், என்னும் வரன்முறைக்கமைந்த யுத்தமாகிய ஒவ்வொன்றிலும் ஏநாதிநாதன் என்முன் நிற்கும் பலம்பெற்றிலானென்பதுண்மை இவ்வித பாகுபாடுடைய நாதனின் வாட்போர் ப்ரதாப வன்மையும், வருமானமும், கீர்த்தியும், கெம்பீரமும், அரச சன்மானமும், அதிகரித்துவரும் ஆண்மையைக் காணப் பிரதிதினமும் எனது மனம் பிரம்மித்து வருகிறது.

எரியுங்கொள்ளியை யேற்றத்தள்ளினாற்போல, நேற்றைய நவமித் திருவிழாவில் நிகழ்ந்ததைக் கேட்க மேன்பட்ட விசனம் என் மனதைத் தகிக்கின்றது.

வ-ம்:—ஐயனே! தாங்கள் வருத்தமடைவது நன்றல்ல. ஏனெனில், ஏநாதிநாதன் வாள்வித்தை ஒன்றில்தான் சமர்த்தன் எனச்சகலருஞ் சொல்கின்றார்களேயன்றி, தங்களைப்போல், மல்வித்தை, வில்வித்தை, கோல்வித்தை, என்னும் பலவித்தையிலும் நிறமையுள்ளவரென்பதை யாருங்கூறவில்லை.

தவிரவும், தங்களது வாள்வித்தையின் பிரதாபத்தை மகாராஜா இதுவரை நன்கறிந்திரார் அதனால்தான் ஏநாதிநாதனுடைய வாள் வேலையை மெச்சி முதல்மரியாதை செய்திருக்கலாமென எண்ணுகின்றேன்.

எதுவிஷயத்திற்கும் தாங்கள் கோபங்கொள்ளாது, நேரே அரச சபைக்கணுகி தங்களது வாள்வித்தையின் நேர்மையைப் பார்த்தறியாது, நாதனுடைய மாணவன் வேலையைக் கண்டு முதன்மரியாதைக் கொடுத்தது ஞாயமா என்று கேட்பதுநலம்.

அதி. வ-ம்:—போதும் இவ்வார்த்தையை இத்துடன் நிறுத்து. அதிசூரனாகிய நான் அரசர்சபைக்கு அநுமதியின்றிச் செல்ல ஒருக்காலுஞ் சம்மதிக்கேன். அன்றியும் இவ்விவகாரத்தை மன்னரிடத்து மனுச்செய்து கொள்ளவும் மனமில்லை. இந்த ஏநாதி எனக்கெம்மாத்திரம். இதுவரைக்கும் ஓர் காரணங்கருதி எனதுவாள் வித்தை வல்லமையை உங்களுக்குச் சரிதாப் பயிற்சி செய்யாது விடுத்திருந்தேன். நானும் தர்பார் காலங்களில் இவ்வித்தையின் விமரிசையை செய்து காட்டாமல் மவுனம் சாதித்தேன்.

நான் விளையாடிக் காட்டாத வாள்வித்தையை ஏநாதி விளையாடக் கண்ட மன்னரும் மற்றெவரும், அவனையொரு பெரிதாகமதித்து விட்டார்கள். இருக்கினும்,

## விருத்தம்

சீடர்காள் சொல்லக் கேளீர் திருநீற்றைத் தேகம்பூசி
வேடமே புனையேநாதி விரோதிதா னெனக்கெந் நாளும்
கேடயங் கத்தி தாங்கி கெடிபெறு மவனையுத்த
மேடையிற் கொல்லா விட்டால் மேலதி சூரன்நானே.

## பாட்டு

(தங்கக்குடமேடுத்து என்ற மெட்டு)

கண்ணிகள்

கேடயங் கத்திகொண்டு வீசிவிளை
யாடுமெம் வித்தை யொன்று இந்த
நாடதிலே எனக்கு இணையில்லை
நாதன் பெரியவனே (கே)

வ-ம்:—இடதுகரத்திற் கேடயத்தை யேந்தி வலதுகரத்தில் வாளைத் தாங்கி, இடசாரி வலசாரியாகச் சுழன்று, மேலெழுந்து, கீழ்த் தாவி விளையாடும் வாள்வித்தையின் உரிமை எனக்கேயன்றி ஏநாதிக்கல்ல, அவனுக்கிந்த யுத்தமுறையும் சரிவரத்தெரியா தென்பதைச் சத்தியமாகச் சொல்லுவேன். இதன்றியும்,

## பாட்டு (ஷை மெட்டு)

சாம்பலை மேற்பூசி வெகுஜெக
ஜாலஞ்செய் சந்யாசி
தாமிவன் வாட்போரில் என்னை வெல்லுஞ்
சாமர்த்தியங் கொண்டவனே (கே)

வ-ம்:—மஹா சிவபக்தனைப்போல் சதாவும் சாம்பலைக் குழைத்து மேலணிந்து, காவியுடுத்தி சந்யாசிவேஷமிட்டுத் திரியும் இவனுக்கு இவ்வாட்போர் வல்லமை எங்கிருந்து வந்தது. சந்யாசிக் கேது தைர்யம். பரதேசிக்கேது பராக்ரமம். பயிராகிக்கென்ன வயிராக்யம். இதுபோல் எதுவோ ஆதிகாலத்திய தாயாதிவகுப்பைச் சேர்ந்தவனென்று இவனுக்கிந்நாள்வரை உயிர்பிச்சைக் கொடுத்துவந்தேன். என் மனவுண்மையறியாது தட்டிக்கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்ரசண்டன் என்னுங் கதைக் கேற்ப, எதுமற்ற இந்நாதனனவன் இத்தகைய இறுமாப்புக் கொண்டு என்னையுமதியாது, என்வித்தையின் தேர்ச்சியையு முணராது அரசமரியாதைக்கு அருகனானன் நல்லது,

பாட்டு (ஷ மெட்டு)

பங்காளி யாமவனை எயினனூர்
பங்கப் படுத்திடவே
சங்கற்பஞ் செய்திடுவேன் பொருதியே
சமரில் வென்றிடுவேன் (கே)

வ-ம்:—தாயாதிகளிலொருவன் அதிலும் சிறுபிராயமுதல் தகப்பனைப் பிரிந்திருப்பவன் என்றெண்ணி அவனை விடுத்திருந்தேன் இனியும் நானப்படி யிருக்கலாகாது.

பாட்டு (ஷ மெட்டு)

இன்னுஞ்சும்மா விருந்தால் ஊரிலுள்ளோர்
என்னைவிரட் டிடுவார்
அன்னவனை இனியே வாளுக்கிரை
யாக்கி வீழ்த்திடுவேன் (கே)

வ-ம்:—இனியும் நான் பொறுமைகாட்டி யிருப்பேனாகில் பொல்லாப்பு வந்து சேரும். சற்றேனுந் தயாதாட்சண்யம் தாயாதி என்ற வுறவின்றி எதிரியாக நினைத்து, நானே நேரிற்சென்று அவனை வாட் போருக்கழைத்து சகலருமறிய சமர்க்களத்தில் ஜயம் பெறுகின்றேன். தவறுவேனாகில் நானதிசூரனல்ல.

ஆதலின் மாணவர்காள் எல்லோரும் என்னுடன் வாருங்கள். நாதனது சிலம்பச் சாலைக்கேகுவோம்.

பாட்டு

(அடடா அடடா என்ற மெட்டு)

வாரீர் வாரீர் வாட்
போருக்கேற்ற ஏநாதிச்
சிலம்பச் சாலைக்கே (வா)

வரிப்புலிபோல் சீறி—வெகு
வலுவுடனே மீறி
வாளைக் கையிலேந்தி
வரிசைமிகும் எனதுடனே (வா)

அதிபதி யதிசூரன்—பல
அரசர்கள் துதிதீரன்
ஆயுதங் கையேந்தி
அணிவகுத் தேன்
கொடி பிடித்தே (வா)

(சீன் முடிவு) [போகின்றனர்]

சீன்—6. இடம்:—ஏநாதி நாதர்.

காலம்—பிற்பகல் சிலம்பக்கூடம்

நடிகர்;—ஏநாதிநாதர், பக்தசிங்கன், திருநாகேஸ்வரன், விஜயசேகரன், வீரகேசரி, விநோதபாஷிதன்.

[ஏநாதி நாதர் ஆசனத்திருக்க சீடர்கள் சகலரும் நின்றவண்ணம் பாடுதல்]

## சீடர்கள் பாட்டு

(சூழ்ந்தசர்க்கார் என்ற மெட்டு)

கண்ணிகள்

ஆதிவேத பூதியணியே
நாதிகுரு நாதா
பாதமாமல ரேதினந்துதி
பாலரெமக் கருள் தா தா தா (ஆ)

ஓதுசிலம்பக் கூடமேவு
முயர்குரு நாதா
மாதவத்துயர் பாதமேதுதி
மைந்தரெமக் கருள் தா தா தா (ஆ)

அருள்நிறைந்த மகிமைவாய்ந்த
அருமை குருமூர்த்தி
திருவடியைத் தினமும்போற்றுஞ்
சேயரெமக் கருள் தா தா தா (ஆதி)

## நாதனார்—விருத்தம்

திருவரு ளோங்குஞ் செல்வச்
சீடர்கா ளாசீர்வாதம்
குருவரு ளதனைப் போற்றுங்
குணமதுங் களையே காக்கும்
வுருதிகழ் எயின னூர்வாழ்
வும்பர்கோ னெம்பி ரான்றன்
மருமலர்ப் பாத முங்கள்
மனதமர்ந் தாளுந் தானே.

வ-ம்:—மாணவர்காள்! சுபமங்க ளாசீர்வாதம். எம்பெருமானது திருவருட் கிருபையால் என்றென்றும் வாழ்வீராக. எல்லோரும் அவரவ ராசனத் தமருங்கள்.

[சகலரும் உட்கார்ந்தபின்]

ஏநா. வ-ம்:—அப்பா, நேற்று நடந்த நவமித் திருவிழாவின் இராஜ பவனி மகோற்சவச் சிலம்ப விளையாட்டு மங்களகரமாக நடை பெற்ற தல்லவா.

விநோ. வ-ம்:—குறைவின்றி நிறைவேறியது. ஆனால், வயிறு நிறை யப் புசிப்பதற்கேற்ற பலகார வகைகள் திருப்தியாகக் கிடைக்க வில்லை.

வீர. வ-ம்:—அண்ணலே! நம் சிலம்பக்கூட மாணவர்களும் அதி சூர ரது சீடர்களும் இருதரத்தினரும் சேர்ந்து விளையாடிய பலவித வேலைப்பாடுகள் ஒவ்வொன்றிலும் நம்மவர்க்கே நற்பெயர், நற் கீர்த்தி கிடைத்ததுடன் சன்மான முதலிய சகல மரியாதைகளை யும் முதலாவதாக எங்களுக்கே கொடுத்தார் மகாராஜா.

விஜய. வ-ம்:—அதுவகையில் அதிசூரரது மாணவர்களுக்குச் சிறிது கவலைதான். அவர்கள் யாவரும் மரியாதைப் பெறுமலே சென்று விட்டனர்.

விநோ. வ-ம்:—மரியாதை கிடைக்குமுன் மரியாதையாகப் போய்விட் டது மகத்தான கௌரவ மரியாதையல்லவா.

ஏநா. வ-ம்:—மாணவர்களே! இதுவகையில் நீங்கள் செய்தது தவறு. அதாவது, உங்களைப்போன்ற மாணவர்களாகிய ஆதி சூரனது சிலம்பக்கூடப் பிள்ளைகள், மகாராஜ சன்மான மரியாதைப்பெறு மற் செல்லும் வண்ணம் நீங்கள் ஏதோ ஒருவகையில் அவர்கள் மனதிற்கு வருத்தத்தைக் கொடுத்திருக்கவேண்டும். இலதேல், அவர்கள் மரியாதைப்பெறுமற் செல்லமாட்டார்கள். இவ்வகை யில் அதி சூரனுக்கு மனவருத்தம் உண்டாகும். அவ்வருத்தம் என்னைச் சாரும்.

வீர. வ-ம்:—இளங்கன்று பயமறியாது என்றபடி எங்களது சிறுமதி யால் நாங்கள் செய்த குற்றத்தை மன்னிக்கவேண்டும். இனி யொருதரம் இவ்வித விஷயத்திற்கு உடன்படோம்.

ஏநா. வ-ம்:—எல்லாம் நம்மையாட்கொள்ளும் இறைவன் கிருபையுந் திருநீற்றின் மகிமையும், பஞ்சாக்ஷர தியானமும் உங்களனைவர்க் கும் உயர்தர மதிப்புக் கொடுத் துதவவேண்டுமே யன்றி வேறன்று.

பக். வ-ம்:—இருக்கினும் தங்களாசீர்வாத மேன்மையும் வித்தியாப்பி யாச விருத்தியு மில்லாவிடில் நேற்று நடந்த ராஜபவனிக் காட்சி யில் நாங்கள் சன்மானம் பெற முடியாதல்லவா.

திரு. வ-ம்:—வாஸ்தவமே. எதற்கும் குருவருட் கிருபையே பெரி தென்பது உண்மைதான்.

விநோ. வ-ம்:—ஏனையா வீண்காலம் போக்குகின்றீர்கள். நேற்று நமது சிலம்பக்கூட நவராத்திரி கொலுக்கலைத்தவர்கள் என் மரியாதையான பலகாரபட்சணப் பழவகைகளை எடுத்து வைத்தீர்களா?

வீர. வ-ம்:—வெகுநேரம்வரை உன்னை எதிர்ப்பார்த்தோம். நீ வாராததை முன்னிட்டு உனக்குத் தரவேண்டிய காளாஞ்சியை உன் வீட்டுக் கனுப்பினேம். உனக்கது சேரவில்லையா?

விநோ. வ-ம்:—அப்படியா சமாச்சாரம். எதற்கும் நான் சென்று வீட்டில் விசாரித்து வருகிறேன்.

[போகிறான்]

ஏநா. வ-ம்:—நமது வித்யாசாலைக்கு இவ்வித விநோதன் ஒருவன் வேண்டியது அவசியந்தான் இவனுல் எந்த சமயமும் நமது மனம் ரசிகமாகவே இருக்கிறது.

வீர. வ-ம்:—நேற்றுடன் நமது சிலம்பக்கூடக் கொலுவும் கலைத்தானது. இன்றுமுதல் பாடந் தொடங்கலாமல்லவா.

ஏநா. வ-ம்:—தடையில்லை. அவரவர் ஆயுதங்களைக் கையேந்தி வரிசையாக நில்லுங்கள்.

[சகலரும் கத்தியைக் கையேந்தி நிற்கின்றனர். விநோதபாஷிதன் விரைவாக ஓடிவந்து]

விநோ. வ-ம்:—ஐயனே! நமது அதி சூரானவர் தமது மாணவர்களுடன் கோபாவேஷமாக வந்து, தங்களைக் காண உள்ளேவர உத்திரவு கேட்டு நிற்கின்றார்.

ஏநா. வ-ம்:—அப்படியா! எதுவோ காரணமாகத்தான் வந்திருக்க வேண்டும். நீ விரைவிற்சென் றழைத்துவா. (விநோதன் போக) நீங்கள் யாவரும் ஆயுதங்களை வைத்துவிட் டமருங்கள்.

[எல்லோரும் அமர்ந்ததும் விநோதன் அதி சூரனையும் அவனது மாணவர்களையும் அழைத்து வருகின்றான்]

ஏநா. வ-ம்:—வருக வருக. எல்லோரும் அமருங்கள். அண்ணு அதி விரைவாக வந்த காரணம் யாதோ?

அதி. வ-ம்:—ஏநாதிநாதா! நானிங்கு வந்த விஷயத்தைக் குறிப்பாலுணருந் தன்மையில்லாத உனக்கு நான் காரணத்தைச் சொல்ல வேண்டியது அவசியந்தான் சொல்லுகிறேன் கேள்.

## விருத்தம்

தரைதனி லரசர் போற்றத்
தனக்கெதி ரில்லை என்று
உரைசெயும் விருது பூண்டு
வுன்மத்த ணுகி நின்ருய்
துரை யதிசூர னென்னைச்
சொந்தமாய் நினைத்தி டாது
விரவிய வாட்போர் செய்ய
விரைவினில் வருகு வாயே.

வ-ம்:—மகா யுத்த வீரனென்றும், வாட்போரில் வல்லவனென்றும், தனக்கெதிரி இல்லை என்றும், அகங்காரங்கொண்டு அரசசன்மானம் பெற்று என் வருமானத்தையும் கௌரவத்தையுங் கெடுத்துத் திமிர்கொண்டு திரியும் உன்னுடன் வாட்போர் செய்வதற்கே வலிய வந்துன்னை யழைக்கின்றேன் ஆதலின்,

## பாட்டு

(வா வா கார்த்திகா என்ற மெட்டு)

### பல்லவி

வா வா நாதனே எதிர்
வா வா நாதனே எதிர் (வா)

### அநுபல்லவி

இரு-வருஞ்சமர் செயுமொரு
மகிமை யுலகறிய (வா)

### சரணம்

வாவா இப்போது வருத்த மில்லாது
மணமேவு மகாஜன முன்பு
மதிக்குநம் மிருவரின்
திறத்தைப் பகுத்தெடுக்க (வா)

சட்டஞ் சட்டமாய்ப்பேசும் சாமர்த்தியமுங்கை வீச்சும்
விட்டுக் கட்டுவாயுந்தன் வீரமெலா மின்றைக்கு
வெளிச்சமாக வேணும் (வா)

வ-ம்:—குலத்துரோகியாகிய உனக்குக் கிஞ்சிற்றும் மனமிரங்கப் படாது பொறுக்கும் வரையிற் பொறுத்தேன் இனி பொறுப்பதிற் பலனில்லை என்பதைத் தெரிந்தே வாதுசெய்ய வந்தேன். மறுத்துரைப்பது மனிததர்மமல்ல புறப்படு யுத்தத்திற்கு.

[ஏநாதிநாதர் யோசித்து நின்று
தமது மாணவர்களைப் பார்த்து]

ஏநா. வ-ம்:—அப்பா; மாணவர்களே! இந்த விவாதத்தில் நீங்கள் ஒருவரும் தலையிடக்கூடாது (அதி சூரனைப்பார்த்து)

விருத்தம்

சூரனென் பதுநீ மெய்யே சொந்தமென் பதுநீ மெய்யே
காரண மேது மின்றிக் கலகத்தைக் கருத லாமோ
தார தம்மிய மிலாது சண்டைநாம் கொண்டோ மாகில்
ஊரவர் நகைப்பா ரிந்த உண்மையைத் தெரிகு வாயே.

வ-ம்:—மகா வீரத்துவமும் போர்த்தொழில் முறையும்பெற்று புலவர்கள் போற்றித் துதிக்கும் அதிசூரனீ என்பதை என் போன்றோர் மறுக்க முடியுமா! தவிர எனது தாயாதி வம்சத்தவன் நீ என்பதும் உலகப் பிரசித்தமானதே இருந்தும் சர்வ சாமான்ய மனிதரைப்போல் யாதொரு காரணமுமின்றி நாம் கலகம் செய்து கொள்வது நன்றாமா?

பாட்டு

(பாதுகையே என்ற மெட்டு)

பல்லவி

அதிசூரா அதிகாரா
அடுத்து என்குலத்தினி லுதித்த சகோதரா (அதி)

அநுபல்லவி

குதித்துக் கொக்கரித்துவீண் கோபங் கொண்டாயே
குற்றமுனக்கென் செய்தேன் உற்றுரைப்பாயே(அதி)

சரணம்

நிரபராதி என்னுடனே சமர்புரிய
நேர்ந்தவயணமென்ன நிகழ்த்துவாய்தெரிய
உரிமையுடையவநீ யுரைப்பதுசரியா
உயர்குடியிற்பிறந்த உனக்கிதுமுறையா (அதி)

வ-ம்:—உன் மனப்படி என்னைச் சமருக் கழைக்கக்கூடிய குற்றமேதேனும் நான் உனக்குச்செய்ததுண்டா? நிரபராதி என்பது தெரிந்தும் முறையற்ற வகையில் வாதுக்கழைப்பது வல்லமையாமா?

பாட்டு (ஷை மெட்டு)

எனக்கும்உனக்கும்வீணுக் கேனிந்தப்பகையே
எடுத்துச்சொலுமென்மொழி தனைத்தெரிகுவையே
நினைத்தநினைப்பெனக்கு நேர்ந்திடவில்லையே
நேருஞ்சமர்புரியநீ எதிரில்லையே (அதி)

வ-ம்:—அற்ப விஷயத்திற்காக அமர்புரிய அழைக்கும் உன் மனதிற் கிணங்க மனமில்லை "தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக் கால், தன்னையே கொல்லுஞ்சினம்" என்பதைத் தெரிந்தும் வீண்கோப வீராவேஷங் கொள்வது நன்றல்ல.

அதி. வ-ம்:—அடடா! என்ன நீ இவார்த்தை, பசுத்தோல் போர்த்த பகல்வேஷக் காரனல்லவா நீ, அதனுல்தான், தொன்றுதொட்டு வழக்கப்படி எனக்கு நடக்கும் அரச சன்மான முதலிய முதல் மரியாதைகளைப் பெறுவதற்கு நீ அருகனுக முன் வந்தனை போலும்.

ஏநா. வ-ம்:—தாயாதிகளாகிய நம்மிருவரில், யாரொருவர் அரச தர்பார் சமயத்தில் சிலம்பமாடினும் முதல் மரியாதைப் பெறும் பாத்யதை யுடையவர்களே தவிரவும், எந்த சமயத்தில் எந்த தர்பாரில் நீயும் நானும் கூடியிருந்தோம் எந்த சமயம் உன்னைப் புறக்கணித்து நான் முன் மரியாதைப் பெற்றேன்.

அதி. வ-ம்:—நேற்று நடந்த நவமித் திருவிழாவில் உன்மாணவர்கள் முன் மரியாதைப்பெற்று வரவில்லையா அதை நீ ஏற்றுக்கொள்ள வில்லையா?

ஏநா. வ-ம்:—நாமிருவரும் ஒன்று சேர்ந்திராத சமயத்தில் அரசரால் மாணவர்களுக்குத் தருவது பரிசாகுமேயன்றி மரியாதைக் குகந்ததாகாது நாம் சேர்ந்திருக்கும், சபையில் அரசரால் நமக் களிப்பதே வழிவழி தரக்கூடிய மரியாதையாகும். தவிரவும் உன்மாணவர்கள் இருக்கு மிடந்தெரியாமல் வந்து விட்டார்கள். என்மாணவர்கள் முதன் மரியாதைப்பெற்று வந்தார்கள். இதிற் குற்ற மென்ன?

அதி. வ-ம்:—குற்றம் குற்றமல்ல என்பதைச் சொல்ல நான் வர வில்லை காலமுழுதுங் கட்சிப் பிரதி கட்சியாக விருந்து சிலம்பக் கூடம் நடத்துவது தகாது ஒரே நிபந்தனை நம்மிருவரில் ஜெய மடையவர் யாரோ அவர்களே சிலம்பக் கூடத்தாசிரியர் ஸ்தா னம் வகித்துத் தொழில் நடத்தலாம் தோற்பவர் யாரோ அவர் கள் அத்தொழிலுக் கருகரல்லர் இதுவே என் கருத்து ஆதலின்

(போதும் போதும் போமங்கள் என்ற மெட்டு)

பல்லவி

போதும்போதும் நிறுத்து புத்தி சொன்னது
புறப்படுவா ளெடுத்து(போ)

அநுபல்லவி

ஏதுமறியாதவ னென்றே யவமதித்து
எதிர்க்கபயம் பிடித்து இயம்பலானாய் தடுத்துப் (போ)

சரணம்

நிரபராதி என்பது வீரமா-சமயம்
நேர்ந்தால் சமர்புரிய பாரமா
தரமற்ற வார்த்தையிது தகாது தகாதடடா
தருணத்தில் நம்மிருவர் சமர்த்தை யறிவோமடா (போ)

என்னவிதஞ் சொன்னாலுஞ் சம்மதிக்கேன்-உன்னோ
டெதிர்த்துப் போர்புரியாமல் விடுக்கேன்
மன்னவன் குலத்தோனானால்
மறுக்காதே என்வார்த்தையை
மற்றவர் புத்திரனானால் கட்டடாவுன்
வாள் வித்தையை (போ)

வ-ம்:—இனி யுனக்குப் பன்முறை பகரமாட்டேன். வீண்காலங் கடத்தாதே. நாளையமாலை நம்மூர்க்கடுத்த வெளியில் சகல ஜனங்கள் முன்னிலையில் சமர்புரிய வருவதற்கு வாக்குக் கொடு.

ஏநா. வ-ம்:—விநாசகாலே விபரீதபுத்தி என்பதுபோல் இதமாக எடுத்துரைக்கும் என் வார்த்தையைத் தடுத்ததுமன்றி, குலத்தைக் கெடுக்கவந்த கோடாரிக் காம்புக்குச் சமானமான நீ, மன்னவன் புத்திரன் நானென்பதை மறந்து பின்னவனுக்குப் பிறந்திருந்தால் பின்னிட்டு நில்லென்று சின்னத்தனமாகப் பேசுகின்றாய்

பாட்டு

பூரிகல்யாணி-ரூபகதாளம்.

பல்லவி

சூரனே அதி சூரனே
துஷ்டத்தனமே படைத்து
புத்தியற்று வித்தைகற்ற (சூ)

அநுபல்லவி

நேரிலென்னுடன் சமர் செய்ய நிற்பாயோ
நினதொரு தலையது தரைவிழ
செயுமெனதொரு திறமறிகுவை (சூ)

சரணம்

தன்னை எண்ணாமல் தலைகீழாய்த்துள்ளுறாய்
சாரமில்லாத சமாச்சாரஞ் சொல்லுறாய்
உன்னைத்தெரியாம லுன்மத்தங்கொள்ளுறாய்

உறமிகு சமர்க்களம் வாராய்
சரிசரிசமர்செய்து பாராய் (சூ)

வ-ம்:—இன்னமும் சொல்கின்றேன். எதுவோ காலவேற்றுமையின் காரணத்தால் மதிமாறுவது எல்லோருக்கும் சகஜமே. எனினும் அகம்பாகமும் அவமதிப்பும் எதிரிபலத்தை எண்ணாது, தன் பலப்ரலமுங் கொள்வது தகாது. இந்தப் பகுத்தறிவை மறந்து பராக்ரம வார்த்தையைப் பிடித்துனது வீண்வாதுக்கு மருந்துண்டு. பிடிவாதக்காரனாகிய உனக்கு மருந்தேது. சாமபேததான தண்டம் என்னும் நான்காவது வாக்கியந்தான் பிடிவாதத்துக்கு மருந்தெனக் கூறலாம். நல்லது உன் இஷ்டப்படி நாளை யுத்த களம் வருகிறேன்.

அதி. வ-ம்:—சபாஷ்! சபாஷ்! ஏநாதி நாதா. அகப்பட்டாய் என்கையில் இனி நீ தப்புவது அசாத்தியம். இருக்கினும் நாளையுத்த களம் வருகிறேன் இப்போது நீ சொன்ன வார்த்தை யானது.

பாட்டு

மெய்தானா இது மெய்தானா-இது
மெய்தானா இது மெயதானா

வ-ம்:—அதிசூரன் அதிலுமுன் தாயாதி. முதுமையாக அரச சமூகத்துக்கு வாள்வித்தையைப் பயிற்சி செய்துவரும் பராக்ரமசாலியாகிய என்னுடன் இப்போதுரைத்த உனது வார்த்தை,

பாட்டு

மெய்தானா இது மெய்தானா-இது
மெய்தானா இது மெய்தானா

வ-ம்:—ராஜ வம்ஸ திலகர்களாகிய உனது மாணவர்கள் முன்னிலையிலும், பாரதவீரர்களாகிய எனது மாணவர் முன்பும், இராஜ குலத்துதித்த நீ, உனது சிலம்பக்கூட மத்தியில் நின்று என்னிடம் இது சமயம் சொன்ன வார்த்தை,

பாட்டு

மெய்தானா இது மெய்தானா-இது
மெய்தானா இது மெய்தானா

வ-ம்:—அண்டிவரும் அதிதி பரதேசிகளுக்காதரவளித்தும், சிவப்ரசாத மென்னுந் திருநீற்றை யணியும் சிவனடியார்க்குத் திருத்தொண்டு செய்தும், சைவசமய நெறியைக் கடைப் பிடித்தும் பக்தி சாதிக்கும் பான்மையுடைய நீ இப்போதென்னிடம் உரைத்த வார்த்தை,

## பாட்டு

மெய்தானா இது — மெய்தானா-இது
மெய்தானா இது — மெய்தானா
கைகொடுத்திடுவாய் — கலக்கமும்விடுவாய்
செய்திடுடு சத்தியம் — செப்பிய மொழியிது (மெ)

வ-ம்:—உண்மையாக நாளையதினம் என்னுடன் நீவாட்போருக்குவருவதாக் கூறியது உண்மையாகில் கைபிடித்து சத்தியம் செய்து கொடு.

ஏநா. வ-ம்:— வல்லான்வகுத்ததே வாய்க்கால் என்பதற்கு வழக்குண்டா அதுபோல் நானுரைத்தவார்த்தைக்கு விபேதமில்லை. தவிரவும் இச்சிறிய காரியத்திற்கு சத்தியஞ் செய்வது தகாது.

அதி. வ-ம்:— அப்படியல்ல நிமிஷத்திற்கு நிமிஷம்மாறிப் பறக்கும் மின்மினிப் பூச்சிக்கீடாக, விநாடிக்கு விநாடி மனமாறுவது மனித சுபாவம். ஆகவே எதற்கும் பிரதிக்ஞை என்பது ஒன்றிருக்கில் பின்மாறிப் பேசுந்தன்மை வராது.

ஏநா. வ-ம்:—தாம் விளம்புவதொவ்வொன்றும் எனக்கு வியப்பாகவே தெரிகிறது.

''எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு'' என்னும் வேதபோதத்தை யுணர்ந்த தாங்கள், நான் வார்த்தை மாறுவேனெனக் கூறுவது பொருந்தாது தமதிஷ்டப்படிக்கும் என்வார்த்தை வழுவாமலும் நாளையமாலை யுத்தகளம் வருவேனென்பது உண்மை.

அதி. வ-ம்:—உண்மையாக வரக்கூடிய வீரத்துவமுள்ள நீ சத்தியஞ் செய்து தருவதில் தவறென்ன.

ஏநா. வ-ம்:—வெறுமனே தமதுடன் பன்னிப்பன்னிப் பேசுவதில் இருவருக்கும் வீண்சிரமமே, தாம் வலியவந்து வாதுசெய்யவா வழைத்த வார்த்தைக்கிணங்கி, தம்முடன் நாளையமாலை எயினனூர்க்கடுத்த வெளிப்புறத்தில், சகலஜன முன்னிலையில்.

## விருத்தம்

சத்திய மாகவந்து சமரது புரிவேன் செய்த
சத்திய வார்த்தை மாறேன் தாயாதிகார மீறேன்
சத்தியமாக நாளை ஜயாப ஜெயந் தெரிந்து
சத்திய வாட்போர்யுத்த சாலையை நியமிப போமே.

வ-ம்:—இன்னுஞ் சந்தேகமா? தயவுடன் சென்று வாருங்கள். நாளை சமர்க்களத்தில் சந்திக்கின்றேன்.

அதி. வ-ம்:—சந்தோஷம் நாங்கள் போய்வருகின்றோம்.

ஏநா. வ-ம்:—நமஸ்காரம் வேணுக் தங்களாசீர்வாதம்.

[அதிசூரான் தன் சீடர்களுடன் போகின்றான்]

ஏநா. வ-ம்:—மாணவர்காள்! நடந்த விஷயங்களை நன்கறிந்தீர்க ளல்லவா, அவனன்றி ஓரணுவும் அசையாது என்பதற்கிணங்கவும், அவரவர் வினையில் அவரவர் வருவாரென்பது போலும். பூர்வ கர்மவினானு கூலப்படி எந்தாயாதி அதிசூரான் என்னை விரோதித்து எதிர்க்கலானுன்.

இருக்கினும் நிரபராதியானநான் அவனை எதிர்க்கும் வல்லமையையுடையவ னல்லேனென்பது நிச்சயம். வினையே விதியாகமூண்டு விபரீதவித்தாகி வந்ததுபோல் அதிசூரான்தானே வந்து சமர்க்கழைத் தடுத் துரைத்ததையுங் கவனியாது சத்தியம் பெற்றுச்சென்றான்.

சாமார்த்திய முள்ளவனை சமர்க்களத்திற் பார்க்கலாமென்பது சான்றோர் துணிபு, அதிசூரானதைமறந்து, பிற்போக்கான பேதைமதி கொண்டு சத்தியஞ்செய்து தரக்கோரினான்.

இலனென்னினும் எவ்வம் உரையாமை ஈதல்
குலவனுடையான் கண்ணே வுள.

அதாவது நற்குலத்துப் பிறந்த ஒருவன் தன்னிடம் வந்து இரப்பவனுக்கு இல்லை என்னாது தன்னிடத்து உள்ளதை ஈவன் என்பது போல், நமது அதிசூரான் தமக்குச் சத்தியவாக்கு வேண்டுமென்று பன்முறையும் பரிந்துகேட்க நானும் பிரமாணப் பத்திரங்கொடுத்து விட்டேன்.

இனி நாளை மாலையுத்தம் நிச்சயம் ஆசிரியருக்கு வேண்டிய பக்கபலம் செய்வது மாணவர்கடமை எனினும், நீங்கள் யாவரும் நாளைய தினம் எனது மாணவர்கள் என்ற அதிகாரத் தோரணைகொண்டு, அதற்கேற்றபடி ஆயுதங்களைக் கையேந்தி அமர்க்களம் வரப்படாது.

ஏனைய மகாஜனங்களைப்போலவே நீங்கள்வந்து இருக்குமிடந் தெரியாமலிருக்கவேண்டும்.

யுத்தம் நடைபெறுஞ்சமயம் நான் தோல்வியுற்றாலும் நீங்கள் வருந்தக்கூடாது. அதிசூரர் தோல்வியுற்றாலும் நீங்கள் அட்டகாசஞ் செய்யப்படாது. ஜெயாபஜெயம் என்பது எங்களிருவருக்கும் ஒன்றே.

ஸ்ரீ ராம பரதலட்சுமண சத்ருக்னனாகிய நால்வரில் அயோத்திமா நகரை ஆராண்டா லென்னவென்று ராமபிரான் குகனிடத்திற்

கூறி யிருக்கின்றார். அதுபோல் தாயாதிகளாகிய எங்களிருவரில் இச் சோழதேச ராஜசமஸ்தான வாட்போர் பயிற்சி வித்தையை யார் பரிபாலித்தாலென்ன. எல்லாம் ஒன்றே.

ஆதலின் எனதன்பார்ந்த சீடர்களே இதை விடவுங்களுக்கு வேறு நான் சொல்லக் கூடியது ஒன்றில்லை, வழக்கப்படி நமது சர்வேஸ்வரனைத் தியானித்து அவரவரகத்திற் கேகுவோமாக,

[எல்லோரும் பாடுதல்]

பாட்டு

(மாதவன் மலரடி துதி என்றமெட்டு)

பல்லவி

மாதிருநல்லூர்வளர் தங்கமே வல்லி
மகிழமுத லிங்கமே (மா)

அநுபல்லவி

ஆதியருப்புக்கோட்டை யாமுத்துசாமி பாட்டை
அநுதினமும்படிக்கும் பஜனாலயஞ் ஜொலிக்கும் (மா)

சரணம்

சங்கர ஹர ஹர சிவசிவசதுர்மறை குருவே-புகழ்
சம்பிரம நடன சிகாமணியாகிய தருவே
மங்களஜோதித மந்திரபூசித
மரகதநிறவமிர்த வல்லி மனமகிழ் (மா)

[போகின்றனர்]

(சீன் முடிவு)

---

சீன்—7. இடம்—காவிரிக்கரை பூந்தோட்டம்.

காலம் மாலை

நடிகர்:—அதிசூரன்மனைவி, சுசீலை, தோழியர், கமலா, விமலா, நடன மாதர்கள், அதிசூரன்.

[சுசீலைத் தோழிகளுடன் நந்தவனம் வருகிறாள்]

சுசீலை பாட்டு

(சொல்லச்சொல்ல என்ற மெட்டு)

வாரீர் வாரீர் மலர்வனத்தைநாடி தோழி
மாரே ஒன்றுகூடி (வா)

எதிர் பாரீர் மலர்ந்தரோஜா வாசம்
மணஞ் சேரு மல்லிகைப்பூவி லாசம்
பதிபுகழ்கா வேரி நதிப்ரவாகநேரில்
பலபலமா வளமிலகும்
நறுமணபூந் தளிர்கொய்யவே (வா)

நீருலாவியபொய்கை யோரமன்னங்கள்வாழும்
நேர்த்தி என்ன கண்காட்சியே

தமிழ்த் தாரார்சரப கவிபோலே
குயில் தானேபாடுஞ் சங்கீதத்தாலே

தாவும்வசந்த காலம்
யாவர்க்கு மநுகூலம்
ஜாதிமலர்த் தாதிலகுங்
காவிதனில் தாதியரே (வா)

வ-ம்:—தோழிமாரே, உடலைத்தொடர்ந்துவரும் உருவத்தின் நிழலைப் போல் நீங்களும் என் பின்பற்றி வாருங்கள். தொன்றுதொட்ட நாள்முதலாகத் தினந்தினம் நாம் யாவரும் இங்குவந்து ஒன்று கூடி மாலைக்கால மகோற்சவங்கொண்டாடும் வழக்கப்படி இன்று நாமனைவரும் ஒன்றுகூடி யிருக்கின்றோம். ஏனடி அடி கமலா, எனக்கின்றைய தினம் ஓர் புதிதத்தினமாகவே தோணுகிறது.

சம. வ-ம்:—அரசியே, எல்லாம்நமதிஷ்டப்படி கிட்டும். எனினும் இன்றைய சுபதினம் என்றுமே கிட்டாது.

சுசீ. வ-ம்:—அது வுண்மைதான் எங்கே நமது மனதிற்குகந்த நடன மாதர்கள் சீக்கிரம் வாவழை.

[கமலா உட்சென்று வர நடனமாதர்கள் வெளிவந்து நாட்டியமாடுகின்றனர்]

## நடனமாதர் பாட்டு

(கண்ணால்பாராயடி எந்தன் என்றமெட்டு)

மனோரம்யமுடன் பாடியாடுவோம் வாச
மலரார் நந்தவனத்தே தேச
மகளாரிப் பூவனத்தே
மாமணி மாமணி மாமணி என்னம்மணி மனோ
நம்மகராணியே நளினக்கல்யாணியே
சம்மானக்தருவேணியே அபிமானியே
சிம்மாதனப்பணி சேருமனோன்மணி
திருமாலெனும் பெருமாள்புயம் வளர்மாவதியே
திகழுடுமலைவளர் சாபம் புகழ்சிங்காரியே மனோ

## இதுவுமது—பாட்டு

மனோரம்யமான ரமணகான
ரசிகதியான நந்தவனங் கூடுவோம்

நாம் கூடுவோம் விளையாடுவோம்
மான்குயிலைப்போல பாடுவோம்
பாடுவோம் பாடுவோம்

மலர்கொய்திடப் பூங்காவைநாடுவோம்
பார்கொன்றைமலர் என்னவிநோதமாய்த்தோணுது

அதோ மயில்கள்நடன மாடுதுதென்பாக
அதோ வாராள்வாராள் நமதுமகராணி
நல்ல சுந்திரகுணராணி மந்தகாசமாய்
சந்த்ரன்போல சதிராக
அதோ மயில்கள் நடனமாடுது தென்பாக மனே

[நடன மாதர்கள் உட்செல்ல]

சுசி. வ-ம்:—பாங்கியா, நடனமாதர்களின் திறமை மிகவும் பெரிது. என்பொருட்டே என்பிராணேசர் இவர்களை இத்தொழிலுக் கேற்படுத்தி யிருக்கின்றார்.

கம. வ-ம்:—அம்மணி, அதிசூரருக்கு மனைவியாக வாய்த்த சுசீலா தேவியாகிய தங்களுக்கு இவ்வித வைபவங்களிருக்கவேண்டுவது சகஜமே.

விம. வ:—நல்லது எஜமானர் வருவதற்குள் புஷ்பம் பறித்து மாலை கோர்த்துக் கொடுத்துப் போகலாம் வாடிகமலா.

சுசி. வ:—அடி கமலா விமலா, உங்களுடன் கூடிப் பூப்பரிக்க நானும் வருகிறேன்.

### பாட்டு-தர்க்கம்

(சமக்க தனக்க என்றமெட்டு)

சுசி. மலர்க்தவனத்திற் படர்ந்தமலரை
மகிழுடன் பறிப்போமே
மாலையாய் முடிப்போமே

கம, விம. வருவோமினிதாய் வனிதாமணியே
திருவாருலகில் திகழுங்கனியே
வஞ்சியே கொஞ்சியே அஞ்சலிலாமலே
மிஞ்சுமலர்வகை பாராய்
மேல்மணக்குதே சீராய்

சுசி. அன்னங்குயில்மயில் முன்னமுலாவியே
அன்புடனே விளையாடும்
அதிமதுரிதம் பாடும்

விம, கம. சின்னக்கிளிகள் சிறகை விரித்துமே
தன்னினத்தோடு சல்லாபம் புரியுதே
என்னசொல்வோமிதன் வுன்னத வைபவம்

எங்கள்மதிமுக ராணி
எழில்மரகத வேணி

சுசீ. வ-ம்:—பாங்கியா பறித்த புஷ்பங்களைச் செண்டு கட்டி மாலையாய் சேர்த்து வையுங்கள் பிராணநாதர் வரவை நான் எதிர்நோக்கி யிருக்கிறேன்.

[தோழியர் உட்புக அதிசூரன் வரக் கண்ட சுசீலை எதிருற்று]

சுசீ. வ-ம்:—நாதா நமஸ்காரம், இன்றேது இவ்வளவுநாழிகை கடந்து வந்தது.

அதி. வ-ம்:—நாயகி, நமது தாயாதி ஏநாதிநாதன் சிலம்பச்சாலைக் கொரு வேலையாகப் போயிருந்தேன். அதனல் சிறிது கால தாமதமானது.

சுசீ. வ-ம்:—என் பாக்கியமே பாக்கியம். பிராணேசா நேற்று நவமி பவனிக் காட்சியைக் காண நான் சென்றிருந்த சமயம், நாதனுரவர்கள் தாயாருடன் சந்திக்க நேர்ந்தது. அவ்வம்மை தங்களது க்ஷேம லாபத்தை விசாரித்து வெகுநேரம் என்னுடன் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அதி. வ-ம்:—இருக்கலாம். பெண்களுக்குள் ஒருவரை யொருவர் சந்தித்த சமயம், பழைய புராதனக் கதைகளைப் பேசிக்காலங் கடத்துவதுதானே முக்கியவேலை, அதிருக்கட்டும். கண்ணே நேரமாகியது. விடுதிக்கேகுவோம் விரைந்துவா.

சுசீ. வ-ம்:—ஆமாம் மாலைக்காலம். ராஜ மகிஷிகள் வரவுங்கூடும். வாருங்கள் உல்லாசமாக இச்சோலையை சுற்றிப் பார்த்துப் போகலாம்.

## தர்க்கம்-பாட்டு

(கச்சணிந்தகோங்கையாளே என்றமெட்டு)

சுசீ.—பாருமென்பங்கில்வாழ் நாதா
நவ நீதா
நல்வி நோதா
தென்றல்-பரவும் பூஞ்சோலை இப்போதான்

அதி.—பகரந்தங்கும்பனிமலர் மகரந்தஞ்சிந்தியபொழில்
பற்பலவண்ண ப்ரகாசம் நல்ல
பண்புவசந்தமிம் மாசம்

சுசி.—வீறுமதனதி காரம்
இன்ப சாரம்

ஆண்பெண் ணேரம் ஆக
வேண்டினனே இந்த நேரம்

அதி—மேலிட்டங்கம்புளகித மாகச்சண்பக நறுமணம்
வீசுமிளந் தென்றல் வாடை-புகழ்
பேசுங்கி ரீடைக்கொரு ஜாடை

சுசி—சந்தோஷப் பக்ஷிகள் கூடி
விளை யாடி
வரும் ஓடி முத்து
சாமிகீதங்களும் பாடி

அதி—அடி—இந்தப்பூஞ் சோலையிலே
சந்திக்கும் காலையிலே
என்ன சொல்வேனிதன் ஸ்லாக்கியம்-நமக்
கிங்கேதானுண்டுண் டாமோக்யம்
[போகின்றனர்]

(சீன் முடிவு)

---

சீன்—8. இடம்—அதிசூரன் வீடு.

நடிகர்:—அதிசூரன், சுசீலை.

சுசி. வ-ம்:—நாயகா, காலைக்கடனைமுடித்து வருவதற்குள் என் வரவை என்றுமிலாதின்று தாங்கள் எதிர்நோக்கிய காரணமென்ன.

அதி வ-ம்:—நாயகி, காரணத்தைக்கருதியே காலைநேரத்தில் உன் வரவுக்குக் காத்திருந்தேன் பெண்ணே.

விருத்தம்

மதிமிகு மகிமை வாய்ந்த மதிமுக வதியே மானே
அதிசய வாட்போர் செய்யும் அதிசூர னெனது தேவி
எதிரியா கியதா யாதி யேநாதி நாத னேடு
ததியிது சமருக் கேகுஞ் சங்கதி சொல்வேன் கேளாய்

பாட்டு

(முருகன் திருமால்மருகன் என்ற மெட்டு)

பல்லவி

மானே ஒருவார்த்தை சொல்வேன்கேளடி
இந்த—மாநிலமேவிய தேன்மொழிதாவிய (மா)

அநுபல்லவி

பூநீறணி பூபனே — ஞாதிமுன்
பொருதுஞ்சம — ரதுவுஞ்செய
மனமும்பெறு — கினதஞ்சுக (மா)

சரணம்

ஆனதனுவின்று — யேநாதிதன்னுட
னமர்க்களஞ் — சென்று நானே-சம

ராடிப்புகழ்பெற்று — நாடிவாரேனிங்கு
அபஜெய மின்றித் — தானே

மானுபிமானமுன்ன — தல்லவோ
மதித்துவிடை — எனக்கருள்வை
வனப்பிலுயர் — முகத்தழகு (மா)

வ-ம்:—விஷயம் விளங்கிற்று, ஒன்றை நினையாத முன்வந்து நிற்பினு நிற்கும் என்றபடி, எதிர்ப்பாராத விதமாக ஏநாதிக்கும் எனக்கும் இன்று வாட்போர் நடக்கப்போகின்றது. ஜெயாபஜெயம் ஒருவர்பங்கல்ல வென்னும் உலகமொழி ஒருபுறம் இருக்கினும் ஜெயக்கொடி என்னதே என்பதைத் திடசித்தமாகத் தெரிவிக்கின்றேன். இதுசமயமே நான் சிலம்பக்கூடஞ் சென்று எனது மாணவர்களை சந்தித்து யுத்தகோலம் புனைந்து போர்க்களம் போகவேண்டும்.

சதிபதி என்னுந் தன்மையிலீடுபட்டு இல்லறம் நடத்தும் ஒவ்வொரு பதியும் சதியையனுசரித்தே ஒருகாரியம் செய்யவேண்டும் என்றமுது மொழிக்கிணங்கி உன்னிடம் உத்திரவு கேட்க நேர்ந்தது. மறுத்துரைக்காது மனமார்ந்த விடைகொடுத்தனுப்பு.

சுசீ. வ-ம்:—நாயகா, காலைக்கடனைமுடித்து கதிரவனைப் பணிந்து வரவுக் கெதிர்நோக்கிக் காத்திருக்குந் தங்களைக்கண்டதும், தாங்கள் சொல்லிய வார்த்தைகள் என்னிருசெவியிலும் நாராசம் பாய்ச்சதுபோ லிருப்பதுமன்றி என்மனமோ அனலிற்பட்ட மெழுகு போல் உருகி பிரம்மிக்கின்றது பிராணேசா, பிராணபதி, பிராணநாதா, பிராணகாந்தா, பிராணகாதலா, பிராணப்பிரியா, பிராணாதாரப்பிரபுவே, இதுசமயந் தாங்கள்

விருத்தம்

சொன்னதோர் வார்த்தைகேட்டு துடிக்குதே எனதுநெஞ்சம்
மன்னனே ஞாதிநாதர் மகிமையைத் தெரிந்திடீரோ
முன்னமே பாகந்தீர்த்து முறைமையோ டிருக்குமன்னர்
தன்னையே யெதிர்க்கலாகா ததியினை கவனிப்பீரே.

வ-ம்:—காதலா, சந்தோஷானந்தத்திற்கேற்ற சஞ்சலம் வருமென்பார்கள். எப்படியெனில் ஜனகராஜ சக்ரவர்த்தி மகள் ஜானகி அல்லது சீதை என்னும் பேர்கொண்ட மாது, ஸ்ரீ ராமனைக் கண்டு காதலித்து, சிவதனுசை வளைக்கப்பெற்ற அவனை மணம் புரிந்து, அயோத்திக்கேகி எவ்வளவு சுபசுக சந்தோஷானந்தத்திலிருந்தாளோ, அவ்வளவுக்கவ்வளவு சஞ்சலத்தை யனுபவிக்கும் பாக்கியத்தையும் அவளுக்கு உடன் கிடைத்தது.

அதுபோல் சுகத்துக்கேற்ற துக்கம் என்றபடி தங்களை மணம் புரிந்த எனது பாலியமுதலின்றுவரை மகத்தான சுகத்தை அநுபவித்த சுகத்துக்கு மேலான துக்கத்திற்காளாகினேன்.

தற்சமயம், எனதாருயிர்க்கும், எனது நண்பிற்கும், ஆதரித்தாளும் பரமபுருஷோத்தமராகிய தாங்கள், என்னிடம்.

பாட்டு

(உஸ்மேதேரா என்ற மெட்டு)

கண்ணிகள்

நல்லவார்த்தை சொல்லவந்தீர்
நாதனே பூம் பாதனே
வல்லிரும்பைச் செல் லெரிக்குமோ
மாரனே சிங் காரனே நல்

வ-ம்:—மன்னவா, தற்சமயம் தாங்கள்கொண்ட நினைப்பு கண்டவர் பழிக்கலாகும் என்பதுண்மை. காரணம், எந்தமுகாந்திரம், அல்லது எவ்விதகுற்றம், அல்லது எவ்வித மாற்சல்யத்தைக் கொண்டு ஏநாதிநாதருடன் சமர்புரியச் செல்கின்றீர். தவிற தாயாதி என்றபட்டம் ஒன்றுண்டே தவிற உமக்கும் அவர்க்கும் மற்றெந்த வகையிலும் சொந்த பூஸ்திதிகளையனுபவிக்கும் சொந்தமில்லையே. ஆனல் தாயாதித்தத துவசுதந்தரமுண்டு.

பாட்டு

(ஷை மெட்டு)

பங்குபாகந் தீர்ந்தபிறகும்
பகைவரோ தாயாதியே
நங்குலத்தோர்க் கிதுவந் நீதி
நங்கைக்கு மிந்த சேதியே நல்

வ-ம்:—காதலா, உங்களது தாயாதிதத்து வத்துக்கேற்ற பங்குபாகந் தீர்த்து, அவரவர்க்குரிய அரசசமுக ஆதிக்கம்பெற்று, அதிமனேல்லாசமுடன் வாழ்ந்து வருமிந்நாளில் உங்களுக்குள் பகைமை என்பது சரியாமா,

## பாட்டு

ஷை மெட்டு

ஞானபூதி யாமேநாதி
நாதனார்மேல் துவேஷமா
ஆனமர்ம மேதெரியா
தலைஃதென்ன ரோஷமா நல்

வ-ம்:—தர்மசொரூபியாகிய நாதனார்மீது தங்களுக்கு துவேஷமாகாது அவரது பிரசித்தியை இவ்வூரறிந்த விஷயமே. ஆதலின் தாங்கள் எண்ணிய எண்ணம் ஈடேறாது அவமானமடைய நேரும். இது வுண்மை.

அதி. வ-ம்:—மனைவியென்று மதித்து உன்னிடம் உண்மையைச் சொல்லி உத்திரவு கேட்டால் விஸ்தரித்துப் பேசுகின்றாய். இருக்கட்டும் அந்த ஏநாதி என்பவன்.

## பாட்டு-தர்க்கம்

(வண்டுவிழி கண்டுமொழி என்றமெட்டு)

அதி. சூரனெக்குமேல் வீரமுற்றவனோகூறாய்-அவனை
தோற்கடிப்பேனின்று வாட்போரிலேநானும் பாராய்

சுசி. சாரவிபூதிதனை யணிந்த பக்தர்தானே-அவரை
சமர்செய்து வெல்லவும் மாகாலாது கனவானே

அதி. சாம்பலைமேல்பூசிசாது வைப்போலவேநடித்து-வருந்
தனத்தைக்கொண்டுசாதம் படைக்கிறான்சங்கமர்க்கடுத்து

சுசி. ஆம்பரதேசியையாரா திப்போன் பெரியோனே-மணா
வாளனேவாட்போர்க்கு போகவேண்டாமினித்தானே

அதி. போகவேண்டாமென்று புத்தி சொல்வதவமானம்-இளம்
பூவையேசொல்வேன் எனக்கார்சண்டையில் சமானம்

சுசி. ஆகமநூன்முறைவேத முணர்ந்தயேநாதி-பக்த
ரானவர்தம்முடன் தானமர்செய்வதந்நீதி

வ-ம்:—மன்னவா, "தன்னைத்தான் காதலனாயின் எனைத்தொன்றும், துன்னற்க தீவினைப்பால்" என்பது பெரியோர் வார்த்தை. இது தெரிந்தும் தமக்கொரு கெடுதியும் செய்யாத ஏநாதிநாதருடன் பொறாமைப் பகைகொண்டு போர் புரிவது தகாது. புருஷ சிகாமணியாகிய தாங்கள் என் வார்த்தையைத் தடுப்பது நன்றல்ல. கவனியுங்கள் கோபந்தணியுங்கள்.

அதி. வ-ம்:—பேதைத் தனமென்பது பெண்கட்குரியது என்று சொல்வதை பிரத்தியட்சமாக இன்றுன்னிடங் கண்டேன்.

## பாட்டு

மோகனம்-தாளம், ஆதி.

### பல்லவி

எனக்குநீமதிசொல்லத் தகுமோ சொல்லாதே
என்முன்னே நில்லாதே அடிஎன் பெண்ணே
என்முன்னேநில்லாதே ஏ

### அநுபல்லவி

உனக்குநானடங்கி நடப்பே னென்றெண்ணாதே
உவமைசொல்லி என்மன நிலைமையைக்கலைக்காதே ஏ

### சரணம்

மனைவிஎன்றே மதித்து வந்தேன் விடைகொடுத்து
வாட்போரிலேஜெயித்து வருவாஎன் றுபசரித்து
எனைவழிய னுப்பிடாதேனோ மனந்துடித்து
எடுத்தெடுத்தோதுகின்றாய் இயம்புமென்சொல்தடுத்து ஏ

வ-ம்:—பெண்ணே, மென்மேலும் எனக்கு மனக்கொதிப்பை யுண்டாக்காதே. நீயல்ல உன்னைப்படைத்த பிரம்மனே என்னெதிர் வந்து கூறினுங் கேளேன். பின்னுமேன்வாது. கண்ணே சந்தோஷமாக உத்திரவுகொடு சென்று வருகிறேன்

சுசி. வ-ம்:—துரையே இதென்ன பிடிவாதம். உத்தம நற்குலத்துதித்த தமக்கு இம்முரட்டுத்தனம் கூடுமா. கண்ணாளா, "வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய,—வாழ்வாரே வாழாதவர்"—என்றபடி உலகவசைக்காளாகி வாழ்வது அழகாகாது. தவிறவும் இதோபாரும் என் தேகத்திற் பூசிய மஞ்சள் வாடை மாறி துர்க்கந்தம் வீசுகிறது. கூந்தலிலணிந்த புஷ்பம் வாடிக்காட்டுகிறது மதிபோன்ற எனது முகமுங்கறுத்துக் காண்கிறது. இவற்றையோசிக்க தாங்கள்செல்லுங்காரியத்திற்கு இதுவொரு அவசகுனம்போல் தெரிகிறது. ஆகவே

## தர்க்கம் பாட்டு

(கட்டை போம்மு மெட்டு)

சுசி. போகாதீர் போகாதீர் மன்னவரே
போற்று மெனைப்பாது காப்பவரே
ஆகாது ஆகாது துற்குறியே
ஆணழகா என்ம னப்படியே போ

(உன்னுயுள் தீர்ந்திடு என்ற மெட்டு)

அதி—சீசீ ஏதேது இவ்வாது யேற்காதடி
எட்டியில் துஷ்டையே

எதிர்க்காதே வழி மறிக்காதே
மனம் பதைக்காதே ஏதே

(ஷை மெட்டு)

சுசி. மன்மதன் போற்று மனோகரே மண
மாலை முடித்த மணவாளரே என்
சம்மத மின்றி சமர்க்களமே நீர்
தான்செல லாகாது இட்சணமே

(ஷை மெட்டு)

அதி. எட்டிப் போடி நிர்மூடி புலம்பாதடி
பூபமேனன் கோபமே
பொல்லாது புத்தி சொல்லாது
எதிர் நில்லாது போ

(ஷை மெட்டு)

சுசி. காயா மரமீது கல்லேறுமோ பிராண
காதல னேவசை தான்மாறுமோ
நீயாதர வின்றிலே றேனக்கார் இந்த
நேரத்தில் நான்சொல்லும்வார்த்தையைக்கேள்

(ஷை மெட்டு)

அதி. வசை ஆறு லாகட்டு மறிவாயடி
அன்னமே இன்னமே
அலட்டாதே புத்தி புகட்டாதே சும்மா
மருட்டாதே

வ-ம்:—போடி போடி பயித்தியக்காரி புருஷாதிக்கம் பெற்று, போர்த் தொழிலிற் புகழ்ச்சியுற்று, சோழமண்டலமெங்கும் பிரக்யாதி பெற்ற யுத்தவீரன் அதிசூரனின் மனைவியான உனக்கு இந்த அதைர்யங் கூடாது.

ஆமடி, சுசிலா ஒருவார்த்தை கேள். அதாவது இல்லறத்திலீடு பட்டு வாழும் சதிபதிகளாகிய மணவாளன்மனைவி என்னு மிருவருக் குள் மன ஒற்றுமை என்பதிருக்க வேண்டியதவசியம். இருக்கினுங் கணவனுக்கு மனைவி மந்திரி போன்றவள், என்பதும்பெரியார்வாக்கு. அதன்படி அரசனாகிய புருஷன் மந்திரியாகிய மனைவியை மதித்து மரியாதைக்கேனும், தான் செய்யப்புகுங் காரியத்தை செப்பினல் தப்பிருந்தால் தடுப்பது சரி, அரசனாகிய கணவன் அக்காரியத்தைச் சாதிக்கலாமென்னு மொருமனதாய்த் துணிந்துசெல்ல எத்தனிக்குஞ் சமயம், மந்திரியாகிய மனைவிவிட்டுக் கொடுக்கவேண்டியதே கடமை. இதை மறந்து நீ நினைத்தபடிக்கெல்லாம் நீதிபுகட்டலானாய்.

அவசகுனமாம் அது ஆகாதாம் அந்தப்பயல் மகா சாதுவாம் அவனை எதிர்த்தால் ஜெயம்பெறலாகாதாம் உலகவசைக் காளாவே ணும். என்னடியிது பூனை கண்ணைமூடினால் பூலோகமே இருண்டுபோ கும் என்ற பூச்சாண்டி காட்டுகின்றாய்.

## விருத்தம்

ஆதிக்கமான சோழ அரசனை தடுத்திட்டாலும்
வேதனும் விஷ்ணுவான விருவர்வந் தெதிர்நின்றாலும்
நீதிசேர் எயினனூர்வாழ் லிங்கமே குறுக்கிட்டாலும்
நாதனா ருடனே வாட்போர்நான் செயப்பின்னிடேனே.

வ-ம்:—இது சத்தியம் இனியும் என்னுடன் வாதுசெய்து தடுத்து ரைத்தால், தண்டித்து கண்டிக்குங் கடமைக்காளாவாய்.

## விருத்தம்

சுசி. சொல்வது நிஜமானாலும்
சுதந்தர வாட்போர் தன்னில் நீர்
வெல்வது நிஜமானாலும் நாம்
விதிமுறை மாறலாகா
செல்வரே நினது தேவி நின்
திருவடி தனையே போற்றி
சொல்வதை கவனிப் பீரேல்
சுபஜெயம் பெறுவீர் நாதா.

வ-ம்:—மனோரம்ய மணவாளா, "கணவனுக் கினியளாய் மிர்துபாஷி யாய் மிக்க கமலைநிகர் ரூபவதியாய், காய்சினமிலாளுமாய் நோய் பழியிலாதவோர் கால்வழியில் வந்தவளுமாய், மணமிக்க நாண மட மச்சம் பயிர்ப்பென்ன வருமினிய மார்க்கவதியாய், மாமன் மாமிக்கிதஞ்செய்பவளுமாய் வாசல் வருவிருந் தோம்புவளுமாய் அணியிழை யொருத்தி வுண்டாயினவள் கற்புடையள்," என் பது நமது சாஸ்த்ரம். மேற்சொன்னவனைத் தையுங்கொண் டொரு மணவாளனுக்கு வாழ்க்கைப் பட்ட மங்கையின்வார்த் தையை, அரசனாகியகணவன் தேவாமிர்தத்துக்கொப்பான வேத வாக்காக மதிக்கவேண்டும். இது சமயம் தங்களது கோபாவே ஷக் கூற்றினால் எனது இதவார்த்தைக ளனைத்தும் தங்கள் செவியிற் புகவில்லை எனினும் தங்கள் வார்த்தையைத் தடுத்துப் பேசுங்கடமை எனக்கில்லாவிடினும், இல்லறவாழ்வி னியல்பிற் கேற்றபடி தற்சமயம் தங்கள் பாதத்தைப்பணிந்து சொல்லும் என் இதோபதேசத்தைத்தடுத்துப்

## பாட்டு

(சுந்தரப்பியாரி—என்ற மெட்டு)

கண்ணிகள்

போகாதீர் பிராணநாதா போர்புரியப் போதான்
ஆகாத காலமிது ஆமென் மொழிதப்பாது போ

மன்னு சம்பன்னு கொண்ட மனத்தை விடுவீரிந்நாள்
தன்னுலைதானுங் கெட்ட சங்கதி யாகும்பின்னால் போ

தெய்வச் சகாயஜோதி தெரிவீர் நமதேனுதி
மெய்யா மவரை வெல்ல வீணெண்ண மேலேனோசொல்ல போ

பாதம் நமஸ்காரமே பாருமென்தன் முகமே
காதலரே கைவாட்போர் களத்துக் கிது நேரமே போ

வ-ம்:—என்னருமைக் காதலா, இனியும் நான் தங்களுக்குச் சொல்ல வேண்டியதொன்றில்லை, தங்கள் பாதசாட்சி, எனது மாங்கல்ய சாட்சியாகத் தாங்கள் வீட்டை விட்டுஓடி எடுத்துவைக்கப் படாது. நாதா, நாதா, நாதா, என்முகம் பாரும்.

[காலைப்பிடித்துக் கெஞ்சுகிறாள். அதிசூரன் கோபித்து]

அதி. வ-ம்:—விக்ரம ஸ்திரி சாகஸம் செய்யும் வேஷக்காரி. வெகு பஜாரி, விநாசகாலக்காரி விரும்பாத புத்திக்காரி, விடடி என் காலை. பெண்ணாகி வந்தப் பிசாசே. என்னைத் துரும்பென மதித்து என் வீரதத்துவத்தை இழக்கச் செய்து ஆண்டிப் பயல், சந்யாசிப்பயல், என் எதிர்நிற்கபயந்து ஒளியும் பயல். அந்த யேநாதிப்பயலைப் பெரிதாக மதித்து, எனக்கே, அடிதடிச் சிறுக்கி, அடிமடச் சிறுக்கி, உன்னை மாலையிட்ட கணவனென் பதை மதியாது, எனக்கே புத்திபுகட்ட வந்தனையல்லவா. சீ சீ!! கத்தபமே விடடி என்காலை.

[காலை வுதரி மனைவியைக் கீழே தள்ளி விட்டு]

## பாட்டு

(ஏனோடா மதமேனோடா என்ற மெட்டு)

பல்லவி

தடுக்காதே கையைப் பிடிக்காதே-வாது
கொடுக்காதே தூரச்செல் தடு

அநுபல்லவி

மடத்தனத்துடன் வழி மறித்து மனம்பதைத்து
நடக்குங்குறி கெடுத்தாய் நடிவிடடி சும்மா தடு

சரணம்

மெத்தக்மெத்தக் கற்றவர்போல் பித்துகொண்டுளறுகின்றாய்
கத்தபச்சிறுக்கியுனை எட்டியே வுதைப்பேனினி
கர்த்தனுணை முன்னே வைத்த காலைப்பின்னெடுத்துவைக்கேன்
யுத்தகளஞ் சென்றுநானும்
வெற்றிபெற்று வாரேனடி தடு

[சுசீலையைக் கீழேதள்ளி வுதைத்துப் போகிறான். சுசீலா எழுந்து]

பாட்டு

(கிளிக்கண்ணி மெட்டு)

கண்ணிகள்

சுசீ. தெய்வத் திருவருளே தெரிந்தோர்க்கொருபொருளே
செய்வதென்ன நானினியே-தெய்வமே
தீர்த்தருள்வா என்குறையை தெ

எத்தனையோவிதத்தி லெடுத்தெடுத்துப்படித்தேன்
அத்துமீறிச் சென்றவரை-தெய்வமே
ஆதரிக்க முன்வருவாய் தெ

மார்க்க மறியாததுன் மார்க்கர் சகவாசத்தால்
மூர்க்கமுடன் சென்றவரை-தெய்வமே
முன்னின்று காத்தருள்வாய் தெ

வ-ம்:—சிவப்ரகாசச் செந்தேனே என்போன்றப் பெண்ணொருத்தியை இடபாகத்து வைத்துக் காதலித்துக் காப்பாற்றுங் கடவுளே.

அன்னை தயையு மடியாள் பணியுமலர்ப்
பொன்னி னுருவும் புவிப்பொறையும்—மின்னின்
வேசி துயிலும் விறல்மந் திரிமதியும்
பேசி லிவையுடையாள் பெண்.

என்னும் ஆன்றோர் வார்த்தையின் தர்மத்துக் கேற்ப வாழ்க்கைப் பட்டு மதன் ரதியென மாசோழதேசம் புகழ மணவாளரும் நானும் இணைபிரியாது வாழ்ந்துவரும் இந்நாளில், "கேடுவரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே" என்பதற்கிணங்க எனது பிராணநாதர், தனது தாயாதி தர்மசொரூபியாகிய ஏநாதிநாதருடன் காரணமின்றிக் கலகம் விளைத்து, இன்று வாட்போர் செய்யச் சம்மதித்துவந்து என்னிடம் அனுமதி கேட்டார்.

காலக்ரம ஜாதகமென்னும் தன்மையுணர்ந்த நான் பலவிதத்தும் தடுத்துரைத்தேன்; என் வார்த்தையை அங்கீகரியாது காலைப்

பிடித்துக் கெஞ்சிக் கேட்கும் எனக்கு நல்லுத்திரவளியாது என்னை யுதைத்துத்தள்ளி என்னுத்திரவன்றி சமர்க்களம் சென்ற எனது பிராணகாந்தர் அகம்பாகச் செருக்கால் அபஜெய மடைந்து ஆருயிர்ப் பிரிவரேல் சுமங்கலியான என்கெதி என்னாகும்.

அகவல்

திருவருளோங்குஞ் செல்வம்விளங்கும்
வருவிருந்தோம்பும் வயல்வளந்தாங்கும்
திரைசெறிகாவிரி சேர்சோழதேசம்
பரவியயெயினனூர்ப் பதிவளர்சிவமே:—
என்னாருயிராம் என்பிராணநாதர்
மூன்னாளென்கழுத்தில் முடியிட்டவிநோதர்
தன்னேரிலாத தயிர்யகெம்பீரர்
மன்னவர்போற்று மகாபாக்யசீலர்:—
தாயாதியான தம்பியேநாதி
நாயனாருடனே ஞாயமிலாமலே
பகைக்குணங்கொண்டு பகைவனாய்மதித்து
வகையறியாமல் வாட்போருக்கழைத்து:—
பின்னவர்சம்மதி பெற்றெனதிடமே
அன்னவர்வந்து அநுமதிகேட்டார்
இன்னலேபுரிந்தால் இன்னலேவருமென்
றெண்ணிநான்புகல ஏசியேசென்றார்:—
போர்க்களந்தனிலே புறமுதுகிட்டு
தோற்றுவிட்டு சொர்க்கம்புகுந்தால்
அமங்கலியாகி அழகையிழந்து
சுமங்கலிக்குற்ற சுகத்தைமறந்து:—
மஞ்சளிழந்து மதிமுகம்வாடி
சஞ்சலந்தவிர்க்குஞ் சாந்துகுங்குமம்
கந்தகளபங் கஸ்தூரிபூசும்
எந்தன்தேகமும் இளைத்துமேவாடி:—
சம்பங்கியெண்ணைத் தானதுதேய்த்து
சம்பந்தமான ஜடையதுகோர்த்து
மல்லிகைச்சூடி மணக்குமென்கூந்தல்
புல்லதைப்போல புழுதியடைய:—
காதோலைமாட்டிக் கம்மலுமின்றி
சீதேவிழுக்குத் திருகாணியின்றி
நத்துபுலாக்கு நவநீதகொப்பு
மெத்தவிலைபெற்று மின்காசுமாலை:—
அட்டிகைகெஜ்ஜை ஆரம்நவரத்னம்
கட்டியேயொளிர்கைக் கடயமுமறந்து
வளையல்துறந்து வயிரமோதிரமாம்

கலையைக்கடிந்து கால்விரற்பீலி:—
தண்டையிலாத் தாரித்ரிபோன்று
கொண்டையிலாது கொரநாட்டுப்பட்டு
சேலையைவிடுத்து சிங்காரரவிக்கை
மேலுமிலாது வெள்ளாடையுடுத்தி:—
தெருவினில்வந்தால் செல்லுவார்கண்டால்
வருகிறாள்விதவை வந்தபசகுனம்
குறுக்கிட்டதென்று குழந்தைவயோதிகர்
வெறுத்துமேபேசும் வேளையென்மனது:—
எண்ணுதுமெண்ணும் இந்தியசாஸ்திரம்
முந்நாளில்சொன்ன முறையிருந்தாலும்
இந்நாளில்பெண்களுக் கிது தகாதென்று
தன்மையுணர்ந்தோர் சட்டத்தைமீறி:—
ஆடவரிறந்தால் அமங்கலியான
வேடமாகாதெனும் விதியமைத்தாலும்
தையலென்குலத்தைச் சார்ந்தநற்பெரியோர்
ஐயோயிம்முறைநமக் கவமானமென்று:—
சொல்வதற்கேனும் சுகமதிழந்து
வல்வினையிதுவென மாதமங்கலியாய்
இருக்கவேநேரும் இதையெலாமுணர்ந்து
வருத்தம்வராது வாட்போரிலெந்தன்:—
பதிதனைக்காத்து பராக்கிரமங்கொடுத்து
சதியெந்தன்தாலி தனக்கருளளித்து
ஏநாதிநாதர் இருதயங்களிக்க
தாநாதியேநின் சகாயமேபுரிவாய்.

பாட்டு
(எதிகேதிநைகு என்ற மெட்டு)

பல்லவி

நீயே துணை வாவா ஈசா ஈசா (நீயே)

அநுபல்லவி

தாயேதந்தையே தருணங்காப்பாயே
ஈசா ஈசா ஈசா சர்வேசா (நீயே)

சரணம்

சொல்வதைமீறியே தோகையைச்சீறியே
துரிதமாய் சென்றனரே நாதன்
அல்லலகற்றியே ஆதரித்தாளாய்
அன்பிற்குகந்தசங் காலிங்கதேவா (நீயே)
[மூர்ச்சித்து படுக்கின்றாள்]

(சீன் முடிவு)

சீன்—9. இடம்—ஏநாதிநாதனர் வீடு.

நடிகர்:—நாதனர், தெய்வகலாவதி.

[தெய்வகலாவதி வீற்றிருக்க ஏநாதி நாதர் வந்து]

## விருத்தம்

முன்னையோர் தவங்கள்செய்து மூந்நூறுநாட் சுமந்து
பின்னையே மகவாய்ப்பெற்றுப் பிரியமாய்ப் பாதுகாத்து
என்னையோ ராளதாக்கி எழில்மிகு மகிமைபூண்ட
அன்னையே தாயேயுந்தன் அடிமலர் போற்றினேனே.

வ-ம்:—அம்மணி! அடியேன் ஏநாதிநாதன் நமஸ்கரிக்கின்றேன். தாயே! தற்காத்தருளவேண்டும்.

[ஒருபுறமாக விசனக்குறியுடன் நிற்கின்றார்]

தெய். வ-ம்:—ஆசீர்வாதம்; என் கண்ணே! எனப்பா உனது மதிமுகம் வாட மனமயங்கி நிற்குங் காரணமென்ன குழந்தாய்,

## பாட்டு

(அருகினில்வா மகனே என்ற மெட்டு)

### பல்லவி

மனக்குறையேன் மகனே நன்
மதிமிகுமதிமுகனே (மன)

### அநுபல்லவி

உனக்கென்ன நேர்ந்தது உரைசெய் யென்னிடமே
உலகெதிர்த் தாலு முடையா மனதிடமே
பிணக்கேது தானுண்டு பேசுயிவ் விடமே
பிரம்மித்து நிற்கலானுய்ப் பெற்றவ ளென்முனமே(மன)

வாள்வித்தை பயிற்சியில் வருஞ்செய லேதோ
மன்னர்மக ரால்வந்த வருத்தமு மீதோ
ஆளுமுன் சீடரா லணுகிய தீதோ
அசையாது நிற்பதைநான் அறியத் தகாதோ(மன)

வ-ம்:—அப்பா ஏநாதிநாதா! எந்தக் காரணத்தைக் கருதி மற்றெவ்வித விஷயாலோசனைகொண்டு விலகிநிற்கின்றாய். உலகமே எதிர்த் தாலும் ஊசலாடாத உனதுமனம் பிரம்மிக்க நேர்ந்த காரண மென்ன? விஷயத்தை விளங்கச்சொல்,

## ஏநாதிநாதர் பாட்டு

(தாயேவந்தனம் என்ற மெட்டு)

பல்லவி

அம்மா அம்மணி எந்தன் அம்மா அம்மணி-நமக்
கானஅதிசூரனின்று தானுரைத்தவார்த்தைகேளாய் (அம்)

அநுபல்லவி

இம்மானிலத்தவர்முன் என்னுடன்போர்புரிய
பெம்மான்மேலாணைவைத்து பேசிச்சென்றான்பிரிய(அம்)

சரணம்

தாயாதியாம்வனின் சமரில்செயம்பெறவே
தாயேவிடைதந்தருள் வாயேயாசீர்வதித்து(அம்)

வ-ம்:—அம்மா! நமது தாயாதியாகிய அதிசூர னென்பவர் அகஸ்மாத்தாக நேற்றிரவு எனது சிலம்பக்கூட மணுகி, என்னுலவருக்குப் பலவித இன்னல் நேர்ந்ததென்றுரைத்து ஒரு ஊரில் இரண்டு சிலம்பக்கூடம் இருப்பது தவறு. ஆக நாமிருவரும் சமர்செய்து ஜெயாபஜெயம் தெரிந்து இருவரில் ஒருவரே சமஸ்தான சிலம்பாசிரியராக இருக்கலாமெனத் தெரிவித்தார்.

அதற்கிசையாது நான் என்னுலியன்றவரைக்கும் எத்தனையோ நீதிகளைப் படித்தும் அவர் கேட்கவில்லை. கடைசியாக இன்று மாலை எயினனூர்க்கடுத்த வெளிப்புறத்தில் வாட்போர் புரிவதாகப் பிரமாணம் வாங்கிச் சென்றார்.

நேரமாயது; சிலம்பக்கூடம் சென்று யுத்தகோலம் புனைந்து செல்ல வேண்டும். தங்களுத்திரவை எதிர்நோக்கி நிற்கின்றேன்.

## தெய்வகலாவதி பாட்டு

(அஜாருங்கடே என்ற மெட்டு)

இதற்காகவா மனம்ஏங்கித்
தயங்கி நிற்கின்றாய் (இத)

அதர்மமாயதிசூரன் அமருக்கழைத்தவீரன்
அவனோடெதிர்த்துசமர் புரிவதோவெகுபாரம்(இத)

வலியவேவந்துவாது புரியவழைத்தசூரன்
மனப்படியேவாட்போர் செயத்தகுதியேஅப்பா(இத)

வ-ம்:—அப்பா! அதிசூரன் தனக்குத்தானே வீணான துவேஷங்கொண்டு இகழ்ந்துபேசி யுத்தத்திற் கழைத்ததும் ஓர் நன்மைக்கென்றே நினைக்கிறேன்.

"அகழ்வாரைத்தாங்கு நிலம்போலத்தம்மை
இகழ்வார்பொறுத்தல் தலை"

என்றபடி அவன் என்ன சொல்லினும் அதை செவிக்கொள்ளாது யுத்த முனையிலும் பொறுமையாகவே நின்று யுத்தம் செய்ய வேண்டும். கண்ணே! நீ எவ்வளவு சாமர்த்திய சாலியாயினும், இறுமாப்புடன் சமர்க்களம் போகாதே. தன் பலத்தைவிட எதிரிபலம் பெரிதென மதித்து, சாம-பேத-தான-தண்டம் என்னும் சதுர்வித உபாயத்தை அநுசரித்து சமர் புரிய வேண்டும். அன்றியும்,

பாட்டு

(காதல் மனோகரியை என்ற மெட்டு)

வேதமந்திர தியானங் கொண்டு கொண்டு நம்
ஆதிகடவுளெதிர் நின்று நின்று வி
பூதிதனை யணிந்து சென்று சென்று
—சமர்புரிவாயே

(தொகையறு)

ஓதுவித்த குருபாதந்தனைத் துதித்து
பெரியோர் தம்சரணம் போற்றி
ஆதரவுக்கேற்ற நமதாசானு மதிபெற்று
அன்பு சார்ந்த
மூதவராம் நமதுறவின் முறையார்க்குந் தெரிவித்து
முழங்குசீடர்க்
காதலர்க்கு நீதிசொல்லி குலதெய்வக் கோயில்சுற்றிக்
கைவாளேந்தி

பாட்டு

கோருமச்சக் கொடிகை கொண்டு கொண்டு எயின
னூரின் சமர்க்களமே சென்று சென்று அதி
சூரன்தனை வாட்போரில் வென்று வென்று
என்முன் வருவாயே

வ-ம்:—மகனே ஏநாதிநாதா, மாதாபிதா குருதெய்வம், எனக் கூறிய நான்கு வாக்கியத்திற்கு முதன்மையான பெருமை கொடுத்து நிற்பது மாதாவாகிய தாயாரின் வார்த்தையாம்.

இதுபற்றியன்றோ, தர்மாவதாரனான ஸ்ரீராம பிரான் தனதிளைய மாதாவாகிய கைகேயியம்மை வார்த்தையைக் கேட்டதும், காவி புனைந்து சடைமுடிதரித்து, தந்தைக்கும் சொல்லாது கானக மேகினன்.

ஆதலின் அப்பா என் புத்திரசிகாமணியே, இதுசமயம் உனக்கு நன் நீதி புகட்டும் உனது தாயாகிய எனது வார்த்தையை மீறாதே, கண்ணே! நடைபெறும் போர்க்கள யுத்தத்தில் நீ வெற்றி வீர

னைத் திரும்பிவரினும் எனக்குச் சந்தோஷமே. அல்லது வாட்போர் யுத்தத்தில் நீ மடிந்து விட்டாலும் உனது வீரசுவர்க்க வாழ்க்கைக்கும் நான் மனமகிழ்வேன்.

ஆனால் சமரில் புறமுதுகிட்டோடினன் ஏநாதிநாதன் என்னும் வசைமொழிக்கு இடந்தாராதே. மகனே, இன்னொரு முக்கியமான விஷயத்தை உனக்கு விவரமாகத் தெரிவித்து ஆசீர்வாதஞ் செய்கிறேன்.

வத்ஸா, ஏநாதிநாதா, அதிசூரன் உனது தாயாதி வம்சத்துதித்தவன், வயதில் உனக்குப் பெரியவன் என்பதை நீ நன்குணர்வாய். காலவிபரீதக்கோலத்தினால், அதிசூரன் பாந்தத்துவத்தை மறந்து, உன்மேற்பகை கொண்டு பகிரங்கமாக வாட்போருக் கழைத்திருக்கின்றான்.

என் செல்வமே, என் புத்ரசிகாமணியே, அதிசூரனுடன் எதிர்நின்று பொருதுங்காலை, எவ்வகையிலும் அவன் புறமுதுகிட்டோடும்படி சமர்செய்யக் கோருகிறேன். சமயம் வாய்த்தது, நம் தாயாதிப் பகைமை தீர்ந்தது. இன்றுடன் இவனைத் தீர்த்து விடுவோம் என்றெண்ணி அவன் உயிருக்கு நீ ஆபத்து விளைவிப்பாயாகில் என்னுயிர் வருந்தும், பின்னவனுக்குரிய ஈமச்சடங்கை நீயே நிறைவேற்ற வரும். அதுசமயம் உன்மனம் விசனத்தை யடையும். ஆதலால் அதிசூரனுக்குயிர்க்கு ஆபத்து வாராமல் சமர்புரிவேனெனச்சத்தியஞ் செய்துதரக் கோருகின்றேன்.

ஏநா. வ-ம்:—அம்மணி, தாயிற் சிறந்தொரு கோயிலில்லை. என்ற வாக்கியத்தை மறந்து நடப்பவனுக்கன்றோ பிரமாணம் வேண்டும். தங்கள் வார்த்தையைச் சிரமேற்கொண்டு, நடக்கும் என்னிடம் ஏனம்மா பிரமாண வாக்குக் கேட்கின்றீர்கள்.

தெய்வ. வ-ம்:--அப்படியல்ல. நீங்களிருவரும் நிற்குமிடம்சமர்க்களம். சோழ மண்டலப் பிரஜைகள் பலரும் ஒன்று சேர்ந்திருப்பர். மகாராஜாவும் வந்திருப்பர். அப்பெரிய சபையினிடையில் நின்று சமர்புரியும் எவனுக்கும் வீரம் என்பது உதயமாகாமற் போகாது. தன்னுடன் பிறந்த சகோதரனையும் கொல்லப்பார்க்குமந்த சமயத்தில், அடுத்த தாயாதி காரத்துவம்பெற்ற ஒருவனைக் கொல்வதற்கு மனம் இடம் தருமென்பதைச் சொல்ல வேண்டுமா.

ஏநா. வ-ம்:—ஆமாமம்மா, தங்கள் வார்த்தையின்படி நான் அதிசூரன் உயிருக்காபத்து வராவண்ணம் யுத்தம் செய்கிறேன். என் மனதையறியாத அவன் என்னுயிர்க்கு ஆபத்து விளைப்பானாகிலது தங்கள் மனதிற்கு சந்தோஷத்தைக் கொடுக்குமா,

தெய்வ. வ-ம்:—வீர வாட்போரில் வீரசுவர்க்கம் புகுந்து வீரலட்சுமியின் சிம்மாதனத்தில் வீற்றிருந்து அரசு செலுத்தும் பாக்கியத்திற்கு யோக்கியனுனுய். அதைக் குறித்து நானேன் வருந்த வேண்டும். உன்னைப் பெற்று வளர்த்து உன்னுலாம் கியாதியைக்கண்டு மனமகிழ்ந்ததைவிடப் பன்மடங்கு அதிகமான சந்தோஷங்கொண்டாடுவேன். உனது வீரசுவர்க்கத்திற்கு வழி காட்டிய நானும் உன்னிடம் வந்து சேருவேன்.

இனி எதற்கும் யோசிக்காதே. அதிசூரனுயிர்க்கு ஆபத்துவிளையா வண்ணம் அமர்புரிவதாக எனக்கு நல்வாக்குக் கொடு.

## ஏநாதி நாதர் விருத்தம்

திடம்புனைந்த சமர்க்களத்தி லதிசூர
னேடுசமர் செய்யுங் காலை
வடம்புனைந்த அவனைப்புற முதுகிடுமோர்
வகைகாண்பேன் வார்த்தை மாறேன்
நடம்புரிந்த பதந்துலங்கு பரமசிவ
ஞணைபிர மாண மென்று
னிடம்புகன்றே னிதுவுறுதி நல்வாக்கு
தாவெனக்கிந் நேரந் தாயே.

வ-ம்:—அம்மணி! தங்களிஷ்டப்படி சத்தியமாக அதிசூரனுக்கு யாதொரு கெடுதியும் நேரிடாவண்ணம் அவனது செருக்கை யடக்கக்கூடிய வகையில் யுத்தம் செய்கிறேன். அன்புகூர்ந்து அநுமதிதந் தனுப்பவேண்டும்.

தெய்வ. வ-ம்:—அப்பா, உன்னைப் பெற்றெடுத்தப் பிரதிவுபகாரப் பாக்கியம் பெற்றேன்.

### பாட்டு

(நம்பிக்கை கொண்டெல்லோ[illegible]ன்ற மெட்டு)

அருமைமகனே சம [illegible]தனில் ஜெயம்[illegible]நல்
லாசீர்வாதமே
ஆசீர்வாதமே சு
பாசீர்வாதமே (அரு)
துரிதமுடனவிடம் சென்று [illegible]தி
சூரனுடன்பொருதி வென்று[illegible]கழ்
ஜொலிக்குங் கொடிபிடிக்க
மதிக்குமுர சொலிக்[illegible]
[illegible]சீர்வாதமே (அரு)

வ-ம்:—அப்பா, பிறர்க்கு முன்னு முற்ப[illegible]க்கு இன்னு, பிற்பகல் தாமேவரும் என்பது நீ தெரிந்ததே. ஆதலின் என்

67839
O-, 2MSK, V

னுருயிர்ச் செல்வமே, போர்க்களத்தில் உனக்கு எத்தகைய துன்பம் நேரிடினும்

பாட்டு ஷை மெட்டு

அதர்ம யுத்தம் புரியாதே நிரப
ராதியவரைக் கொல்லாதே நமக்
கானநமசிவய தேவனருள் பெருகும்
ஆசீர்வாதமே (அரு)

வ-ம்:—அதர்ம யுத்தம் செய்வதை விடு. தர்மயுத்தமே ஜெயந்தரும் என்பதை கவனி சரணுகெதி யடைந்தவனேயும், ஆயுதமின்றி வரும் நிரபராதியையும் உன் வுயிரையேனுங் கொடுத்துக் காப்பாற்று.

எல்லாம்வல்ல உனக்குஎன் ஆசீர்வாதம் என்றென்றும் பாதுகாக்கும் அன்றியும் உனது விரதமகிமைக் கேற்ற வேதாகமமூர்த்தியாம் நமது சிவபிரானின் நமச்சிவாயமந்திரம் உனது பக்கத்திருந்து பாதுகாக்க எனது ஆசீர்வாதம். சுத்த வீரனுகிய வுனக்கு வேறென்ன நான் சொல்லப் போகிறேன். வெற்றி பெற்றுத் திரும்பிவா.

[நாதனுர் பணிந்து போகின்றனர்.

(சீன் முடிவு.)

---

சீன்—10. இடம்:—இராஜவீதி

நடிகர்:—சாம்பான்,

[பக்தசிங்கன் விஜயசேகரன் வீரகேசரி. விநோத பாஷிதன் ராஜசிம்மன் ராஜேந்திரன்.

[சாம்பான் வெளிவந்து பறையடித்து]

பாட்டு

(அர்ச்சுனமவாராஜா என்ற மெட்டு)

கண்ணிகள்

வாங்க வாங்க வாங்களேயா வந்து பாருங்கவேல
வாழுமிந்த் வூர்க்காவேரிக் கரையடுத்தாப்போலே
மவாராசாமுன்னுலே மந்திரி முன்னுலே ஊர்
மாசனங்கமுன்னுலே மாடுவரும் வேளே

கத்திசண்டை போடுராங்கோ காட்டு வேங்கைபோலே நீங்க
காணவரவேணு மின்னு கத்துவதென்வேலே

வ-ம்:—ஐயா, பெரியவங்களே, சின்னவங்களே, நம்ம எயினூர்காவேரிக் கடுத்தாப்போலே இண்ணைய சாயங்காலத்திலே, நம்மவூரு வஸ்தாவுகளான அதிசூர் எனாதிநாதன் ரெண்டுபேரும் கத்தி சண்டைபோடுராவளாம். அத்தே பார்க்க எல்லாரும் வரணு மிண்ணு நம்மமவராசா தப்படிக்கச் சொன்னுவ. இது சேதி தெரிஞ்சுநீங்க எல்லாரும்

பாட்டு ஷ்டி மெட்டு

வாங்க வாங்க வாங்களேயா வந்துபாருங்கவேல நம்ம
வாழுமிந்த ஊர்க்காவேரிக் கரையடுத்தாப்போலே

[தப்பட்டை யடித்துக்கொண்டே போகின்ருன். பக்தசிங்கன் விஜயசேகரன் வருகின்றனர்.]

பக்தசிங். வ-ம்:—நண்பா, ஊரெங்கும் ஒரே வார்த்தையாக அதிசூரனே ஜெயமடைவானெனச் சொல்கின்றனர்.

விஜ. வ-ம்:—ஜெயாபஜெயம் என்பது ஒருவர் பங்கல்ல. எல்லாம் இன்னுமொரு நாழிகையில் தெரிந்துவிடும். நமதாசிரியரும் யுத்தகோலத்துடன் பிரயாணமாகி நேரே இராஜமாளிகை சென்றிருக்கின்ருர். இதற்குள் யுத்தகளத்திற்கு வந்திருக்கலாமென்று நினைக்கிறேன். நாமும் விரைந்துபோவது நலம்.

பக்த. வ-ம்:—ஆமாம். இக்காரியத்திற்கு மகாராஜா சம்மதித்திருக்க மாட்டாரே.

விஜ. வ-ம்:—அதிசூரனது அறைகூவுதலுக்கு நமதாசிரியர் முதலில் சம்மதித்தாரா. இல்லையே, பின் சூரனது துடுக்கான வார்த்தையின் சூடுபொறுக்காமல்தானே நாதனர் சம்மதித்தார்.

அதுபோல் அதிசூரனுடைய அபரிமிதமான வார்த்தையின் குட்டு வெளியாகட்டுமென்று மகாராஜா சம்மதித்திருக்கலாம்.

பக்த. வ-ம்:—என்ருலும், எயினனூர் வாசிகள் என்றுமே கண்டுங் கேட்டுமிராதவகைதானிது. எல்லாம் ஈசன்செயல். நாம் போகலாம் வா.

[இருவரும் உட்செல்ல ராஜசிம்மன் ராஜேந்திரன் இருவரும் வருகின்றனர்.]

ராஜ. வ-ம்:—ராஜேந்திரா! உன் மனதிலெப்படித் தோற்றுகிறது.

ராஜே. வ-ம்:—எப்படித் தோற்றுவதாவது. ஜெயமென்பது நமது அதிசூரருக்குத்தான். இதற்கு ஜோசியம் பார்க்கவேண்டுமா

என்ன, ஏநாதிநாதனுக்கு என்ன தெரியும். எதுவோ இரண்டொரு அலங்காரப்பாடம் விளையாடுவான். யுத்த விளையாட்டு சூரருக்கே உரித்தானது. இன்றுடன் ஏநாதிநாதன் இருக்குமிடந் தெரியாது ஓட்டம் பிடிப்பது உண்மை.

ராஜ. வ-ம்:—யுத்தகோலத்துடன் ஏநாதிநாதன் மகாராஜா மாளிகைச் சென்றதாகக் கேழ்வியுற்றேன்.

ராஜே. வ-ம்:—இருக்கலாம். அந்தரங்கமாக மகாராஜாவைப் பணிந்து, அதிசூரரிடம் அவமானமடையாவண்ணம் காப்பாற்றவேண்டுமெனக் கேட்கப்போயிருப்பான். அவன் பசப்புக்கு மகாராஜா மனமிசையமாட்டார்.

ராஜ. வ-ம்:—ஏற்கெனவே மகாராஜாவுக்கு ஏநாதிமீது சிறிது அருவருப்பென்றே சிலர் சொல்லக்கேட்டிருக்கிறேன்.

ராஜே. வ-ம்:—இருக்காதா பின்பு. மகாராஜாவின் தருமத்திற்கு மேற்கொண்ட தருமம் செய்கிருன். வரக்கூடிய பரதேசிகளுக்கு அன்னம் அளிக்கப் பின்னிடுவதில்லை. தவிற, சதாவிருத்தி கொடுத்துவருகிருன். அடியார்களுக்கு விபூதி, திருவோடு, ருத்திராக்ஷம், காவிவஸ்திர முதவியதும் தருகிருன், இதனுல் இவன் பெயர் எங்கும் பரவுகிறது. இதுபற்றியே அரசருக்கு இவன்மீது நல்லபிப்பிராயமில்லையென்று எனக்கு முன்னமே தெரியும்.

ராஜ. வ-ம்:—சரி சரி நேரமாகிறது. நமதாசிரியர் இதற்குள் யுத்தரங்கம் சென்றிருப்பார். விரைவிற்போகலாம் வா.

[போகின்றனர். விநோதபாஷிதன் வர எதிரே வீரகேசரிவந்து ஒருவருடன் ஒருவர் மோதிக்கொண்டதும்]

வீர. வ-ம்:—என்னயிது விநோதரே! எங்கேபார்த்துக்கொண்டுவருகிறீர். ஏனையா இப்படி மேல்விழுந்து மோதினீர்.

விநோ. வ-ம்:—கோபம் வேண்டாம். ஓர் பெரிய யோசனையிலாழ்ந்து வருஞ் சமயம் தாம் எதிர்வந்ததைக் கவனிக்கவில்லை.

வீர. வ-ம்:—அதிசூரனும், நமதாசிரியராகிய ஏநாதிநாதரும் வாட்போர்புரியும் வல்லமையைக் காணப்போகுமிந்த சமயம் எந்த யோசனையையா உமது மனதில் வந்து புகுந்துகொண்டது.

விநோத. வ-ம்:—அதுதானையா, யுகம் யுகம் என்று சொல்கின்றீர்களே அதன்பெயர் மனதிலிருக்கிறது. நினைவிற்கு வரவில்லை.

வீர வ-ம்:—ஆமாம். கிரேதாயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்று சொல்வார்கள்.

விநோத. வ-ம்:—நான்காவது யுகந்தான் கலியுகமா.

வீர. வ-ம்:—என்ன விநோதரே! கலிகால மனிதராகிய வுமக்கு நடக்குங்காலம் கலியுகமென்பது தெரியாதா.

விநோத. வ-ம்:—தெரிந்தா லும்மையேன் கேழ்க்கிறேன். அதிருக்கட்டும். மூன்ருவது யுகமாகிய துவாபர யுகத்தில் ஒருகதை நடந்ததாமே. அது என்ன கதையையா.

வீர. வ-ம்:—புரூரவச்சக்கிரவர்த்தி கதை, நளச்சக்ரவர்த்தி கதை, யயாதிமகாராஜன் கதை, சந்தனு கதை, துஷ்யந்தன் கதை எனப் பல கதைகளுண்டு.

விநோ. வ-ம்:—இல்லையையா, அண்ணன் தம்பிகள் ஐந்துபேருக்குள் நடந்த கதையையா. அதன்பெயரை என்னவென்ருே சொல்கின்ருர்கள். ஞாபகத்திற்கு வரவில்லை.

வீர. வ-ம்:—ஓ ஹோ! பஞ்சபாண்டவர் சரித்திரம் ஸ்ரீ மகா பாரதமென்றும் சொல்வார்கள்.

விநோ. வ-ம்:—அதுதானையா, அந்தக் கதையில் அர்ஜுனன் என்பவனுக்கும் கர்ணன் என்பவனுக்கும் யுத்தம் நடந்ததாமே அது வுண்மைதானு.

வீர. வ-ம்:—ஆமாம். அர்ஜுனனுக்கும் கர்ணனுக்கும் அமர் நடந்தது வாஸ்தவந்தான். ஏனையா இந்த சமயம் இந்தக் கேழ்வி யுமக்கு.

விநோ. வ-ம்:—பொறுமையா சொல்கிறேன். அந்த அர்ஜுனன் யாரு. அந்தக் கர்ணன் யாரையா.

வீர. வ-ம்:—பாண்டவர்களில் தருமருக்கு மூத்தவன் கர்ணன்தான் இளையவன் அருச்சுனன்தான்.

விநோ. வ-ம்:—வந்திரா வழிக்கு. அர்ச்சுனனும் கர்ணனும் அண்ணன் தம்பிகளல்லவா.

வீர. வ-ம்:—இல்லையென்று சொல்ல எவரால் முடியும். வியாசர்தான் கல்மேலெழுத்தாய் எழுதிவைத்திருக்கின்ருரே.

விநோ. வ-ம்:—நல்லது அர்ச்சுனன் பாணத்தால் அடிபட்டு கர்ணன் இறந்தது வுண்மைதானு.

வீர. வ-ம்:—என்னையா உமது கேழ்வி விநோதமாகவே இருக்கின்றது?

விநோ. வ-ம்:—நான் விநோதபாஷிதன்தானே. என் கேழ்வி விநோதமாகத்தான் இருக்கும். ஆதலின் நான் கேட்டதற்குப் பதில் சொல்லுங்களையா.

வீர. வ-ம்:—அர்ச்சுனன் பாணத்தால் கர்ணன் இறந்தது வுண்மை தானெனக் கதை சொல்வது தமக்குத் தெரியாதா.

விநோ. வ-ம்:—தெரியும் தெரியும். ஆனால் கர்ணன் இறந்தவுடன் தருமராதியர் என்ன செய்தார்கள்.

வீர. வ-ம்:—கர்ணன் தனது தமையனெனத் தெரிந்த தருமன் உயிர் விட்ட கர்ணன் உடலை எடுத்து சிம்மாதனத்தருகில் வைத்துக் கங்காபிஷேகம்செய்து அஸ்தினபுரிக்கு அரசன் கர்ணனேஎன்று பட்டங்கட்டினாராம்.

விநோ. வ-ம்:—அப்போது கர்ணனைக்கொன்ற அர்ச்சுனன் என்ன செய்தான்.

வீர. வ-ம்:—வினைவசத்தன்மையால் பின் வருவதை முன் நினையாது நமது சகோதரனைக் கொன்றுவிட்டோமேயென்று அழுதானும்.

விநோ. வ-ம்:—அழுதது சரியையா, கர்ணனுக்கேற்ற ஈமக்கிரியை செய்தது யாரையா?

வீர. வ-ம்,—நூற்றொருவரான துரியோதனாதியரும், பஞ்சவர்களாகிய பாண்டவரும் சேர்ந்துதான் கர்ணமகாராஜனது கருமக்காரியங்களை நடத்தினார்களென்று வியாசமுனிவர் விளம்பியிருக்கின்றார்.

விநோ. வ-ம்:—அப்படியானால் துரியோதனாதியர் என்பவர் யாவர்.

வீர. வ-ம்:—என்னையா உமது கேழ்வி, திருதராஷ்டிரன், பாண்டு மகாராஜன் என்னும் அண்ணன் தம்பிகளான திருதராஷ்டிரனுக்குப் பிறந்தவர்கள் நூற்றொருவர்.

இளையவனாகிய பாண்டுவுக்குப் பிறந்தவர்கள் ஆறுபேர். இவர்களில் கர்ணனைத் தவிர்த்து ஐந்துபேரென்றே வியாசர் கதை எழுதியிருக்கின்றார்.

விநோ. வ-ம்:—வியாசவர்த்தமானம் இருக்கட்டும் கடைசியாக தங்களை நான் கேட்பதொன்று. அதாவது அஸ்தினபுரிக்கு அதிகாரத்துவம் பெற்றவர்கள் யாரையா.

வீர. வ-ம்:—பாண்டவராகிய ஐவரே.

விநோ. வ-ம்:—கௌரவர் பாண்டவர் என்னுமிவ்விருவரில் அஸ்தினபுரியை யாராண்டாலென்ன?

வீர. வ-ம்:—எல்லாம் ஒன்றுதான்.

விநோ. வ-ம்:—ஒன்றுதானே இதே கதையைப்போல் இந்த நான்காவது யுகமாகிய நமது கலிகால ஆரம்பத்தில் நமதாசிரியர் நாதனு

ரும், தாயாதியாகிய அதிசூரனும் வாட்போர் சமர்செய்யப்போகின்றார்களே. இவ்விருவரிலொருவர் இறப்பது அல்லது ஜெயிப்பது என்பது உண்மைதானே. இருவரும் ஒருவருக்கொருவர் புறமுதுகிட்டோடி ஜெயம்பெற்றால் சரி அல்லது இருவரிலொருவர் இறப்பாராகில் இறந்தவரின் ஈமச்சடங்குக்கு செய்ய இருப்பவர் பாத்தியதைப்படவேண்டியதே. இவ்விஷயமறியாது இருவரும் பொருத எத்தனித்தார்களே. இது காரியத்தைத் தீர்க்காலோசனை செய்யாது நமது சோழ தேசாதிபதியும் இடங்கொடுத்துவிட்டாரே. இதென்ன விபரீதம் பிள்ளையார் பிடிக்கக் குரங்காயிற்றே இதற்கென் செய்வதென்ற யோசனையைக்கொண்டே என்னையறியாமல் நான் வருகிறேன்.

வீர. வ-ம்:—விநோதபாஷிதரே! மெச்சினேன் உமது வார்த்தையின் விசேடத்தை. இதைப் பற்றிய கவலை நமக்கு வேண்டியதில்லை. தாயாதிகாரத்துவம் பெற்ற அவ்விருவர்களுக்கே இவ்விஷயாலோசனை வேண்டும்.

வரம்புகடந்து இருவரு மனமொத்து வாட்போர் புரிய நேர்ந்த இது சமயம் நமக்கேன் இவ்விஷயாலோசனை.

எல்லாம்வல்ல எம்பெருமான் கிருபையால் ஏனாதிநாதராகிய நம் குரு குருமூர்த்தி ஜெயம்பெறும் பிரார்த்தனைசெய்து யுத்தரங்கத்திற் கேகுவோம். வாரும் சீக்கிரம்-

[போகின்றனர்.]

(சீன் முடிவு)

சீன்—11. இடம்—சமர்க்களம்.

காலம்.

நடிகர்:—ஏனாதிநாதர், அதிசூரன், சோழமகாராஜா மந்திரி பிரதானியர் முதலிய பிரஜைகள் இருதரப்பு மாணவர்கள்.

[சகலரும் யுத்தரங்கசபையில் ஒன்று சேர்ந்திருக்கின்றனர் குறித்த நேரத்தில் ஜெயமுரசம் வாசிக்க ஜெயக்கொடியாட்டுகின்றனர். அதிசூரனும் ஏனாதிநாதரும் யுத்தகோலத்துடன் வாளாயுதங்கத்தி கேடயத்தைக் கைக்கொண்டு போர்க்களத்தில் எதிரெதிர்நிற்கின்றனர், ஜனகரகோஷம் நின்றதும்.]

## அதிசூரன் விருத்தம்

ஆமடா அடாயேநாதி யனைவர்க்கு முன்னேவந்து
ராமனின் தூதனைப்போல் நடுங்கியே பதுங்கலானாய்
ஏமகா னுனக்கின் றென்னுடனெதிர்க்க வந்தாய்
போமடா வுனதுவீரம் புரவலர் நகைக்கத்தானே.

### பாட்டு

(தகுமோடா என்ற மெட்டு)

பல்லவி

பாரடா என் வாட்போரின் சாமர்த்யம் (பார)

அநுபல்லவி

ஆரடா எனக்கெதிர் ராமடா யேநாதி
அடடா வாளை எடடா கையில்
தொடடா சமர் இதடா ததி (பார)

சரணம்

வீசினேன் கட்டடா விலகினேன் தட்டடா
வீரனுமதி சூரனென்னிடம்
கூறடா பதில் தேறடா மனம் (பார)
இடசாரி வலசாரி இடமாறி நில்லடா
இன்றேயுன துடல்ரெண்டு
என்றேனென திடம் நின்று (பார)

வ-ம். அடடா, ஏநாதிநாதா சாம்பலைமேற்பூசிச் சன்யாசிகளுக்கு உபசரிக்கும் தகத்தான அன்னமடமல்ல இது வீரத்தைக் காட்டும் வாட்போரின் சமர்க்களம் என்பதை நினைத்து மவுனஞ் சாதிக்காது மனதில் பயமில்லாது நீ கற்றவித்தையைக் காட்டடா பார்க்கலாம்.

## ஏநாதி நாதர் விருத்தம்

அதிசூர நீயென் றுலும் ஆத்திரப் படலாகாது
தகியிது சமர்க்க ளத்தில் தன்பல மேநில்லாது
எதிரியின் பலத்தைக் கண்டு இலங்குபோர் புரிதல் நன்று
விதிதவ றுது இந்த வேளைவாட் போர் செய்வாயே.

### பாட்டு

(தசரதா என்ற மெட்டு)

பல்லவி

அதிசூரா சும்மா
அலட்டாதே பலமிருந்தாலே எதிரே
வா வா அதி

அநுபல்லவி

ஓதிபெருத்தாலது தாளுகுமோவிடு
உன்சமர்த்தும் என்சமர்த்தும்
இன்றைக்கு வெளியாய்விடும் அதி

சரணம்

விண்மணிதனக்கு முன்னால்
மின்மினி பறந்தது போல்
வேளைஎன்முனே எதிர்த்தாய்
வாளைக்கையிலே எடுப்பாய் அதி
பந்துருண்டை போலெழுந்து
கந்துபாய்ந்து வெட்டுமெந்தன்
பக்கத்தில் வருவாயாகில்
இக்கணம்நீ பஸ்பமாவாய் அதி

[இருவருஞ் சண்டை செய்கின்றனர். அதிசூரன் ஏநாதிநாதருடன்போர்செய்ய இயலாது கத்தி கேடயத்தைக் கீழ்ப் போட்டு நிற்கின்றான்]

## ஏநாதிநாதர் பாட்டு

சஹானா—ஆதி.

பல்லவி

வீரமெங்கே வுன் தீரமெங்கே
கெம் பீரமே வுனது வீர

அநுபல்லவி

அதி-சூரனுபுலகில் பேர்வகித்திருந்துமின்று
தோற்றுப்போனாயையோ பாவம் பாவம் வீர

சரணம்

பொந்திலாந்தை விழிப்பதுபோல ஏனோவிழிக்கின்றாய்
போதும்புறம்பேசெல்வாயா போற்றியேயுத்தம்செய்வாயா வீர
சட்டம் சட்டமாகப்பேசும் அட்டகாசவார்த்தையெங்கே
இஷ்டமெப்படியோசொல்வா யின்னமும் சமர்புரிய வீர

வ-ம்:—வீரதத்துவம்பெற்ற அதிசூரா, எங்கே உனது விஜயமுரசு அணிந்தவிருது, மணர்ந்தமாலை, வீரவாள் முதலிய சகலத்தையு மிழந்து அச்ச மடம் நாணம் பயிர்ப்பென்பதை வகித்த ஆரணங் கார்போன்று தலைகுனிந்து நிலம்பார்த்து நிற்குங் காரண மென்ன. ஐயோ பாவம்! உனது அதிசூரத்துவ வாட்போர் வல்லமை இவ்வளவுதான்போலும். போகட்டும் நிராயுதபாணி

யாக நிற்கும் உன்னைக்கொல்வது வெற்றி வீரனாகிய எனக்கது யுக்தமன்று. உம் ஆகட்டும், விழுந்த வாளைக் கையேந்தி யுத்தம் செய். அல்லது உயிர்தப்பிப் பிழைத்தோமென்று புறமுதுகிடு. எனது தாயாதிகாரத்துவத்தைக் கருதி இன்றுனக் குயிர்கொடுத் தேன் உன் சம்மதமென்ன?

அதி. வ-ம்:—நல்லது. அடா ஏநாதியே! கைதவறிக் கத்தி கேடயத்தைக் கீழ்விடுத்து நிற்கிறேனென்று வெகு வீரவார்த்தை பேசிப் புறமுகிட்டோடப் புகன்ற உன்னுயிரை எமன்பதிக் கனுப்பும் என் வீரத்தைப் பாரடா நில்லடா யுத்தத்திற்கு உம். பஜாவ்.

[இருவரும் மறுமுறை சமர்புரிய அதி சூரன் புறமுதுகிட்டோடுகிறான்-]

(சீன் முடிவு)

---

சீன்—12. இடம்—சிலம்பக்கூடம்.

நடிகர்:—அதிசூரன்.

## விருத்தம்

பின்வருவதையெண்ணாது பெருமைசேர் வார்த்தைபேசி
மன்னவர்சபையின்முன்னே மானங்கெட்டோடிவந்தேன்
என்னினிசெய்வேனந்தோ என்குறைதனையேநீக்கி
முன்னமேவந்துகாவாய் மூர்த்தியேபோற்றிபோற்றி.

## பாட்டு

(பிகடிபணுதோஜாயே என்ற மெட்டு)

கண்ணிகள்

ஐயோ இனி என்செய்வேன்
அபகீர்த்திக் கெவ்வாறுய்வேன்
பொய்யோநான் கொண்டஎண்ணம்
புறமுதுகிட்டேன் முன்னம் (ஐ)
வீணாதே என்வீரம்
விருதோடு வாழ்ந்த சூரம்
ஏநாதிநாதன் தீரம்
எனக்கே நினைக்க அபாரம் (ஐ)
கண்டோர் நகைக்க லானேன்
கருதாமல் மோசம்போனேன்

பெண்ணாள்முனெவ்விதம் செல்வேன்
பேசுமவளுக்கென்ன சொல்வேன் (ஐ)

வ-ம்:—ஒன்றை நினைக்க அதுவொழிந்திட் டொன்றாகும், அன்றியது வரினும் வந்தெய்தும், ஒன்றைநினையாத முன்வந்து நிற்பினு நிற்கும், எனையாளுமீசன் செயல் என்று ஆன்றோர் கூறியவண்ணம் என்வகையிலமைந்தது.

பொறுமை பெரிது பொறாமை கொடிது என்பதும் சரியே, எனது பொறாமையே என்னை இக்கெதிக்கு ஆளாக்கியது. தானதிக சூரனாலுமே எதிராளி தன்பலங் கருதவேண்டுமென்பதையும் ஆலோசிக்காது அகம்பாகங்கொண்ட என் மனது ஆணவம், வீரம், தீரம், விருதுபெற்ற கெம்பீரம் எல்லாமழிந்து பல்லாயிரம் ஜனங்கள் கைதட்டி நகைக்க அரசராதியோர் பரிகசிக்க, சிலம்பக்கூட மாணவர்கள் புறக்கணிக்க, போர்க்களத்தில் ஏநாதிநாதனை ஜெயிக்க யேலாது புறமுதுகிட்டோடிவர நேர்ந்தது.

இனி இவ்வுடலைச் சிங்காரித்துக்கொண்டு அதிசூரன் என்னும் என்னைப் பாருங்களென்று ஊருக்குள் செல்வதைவிட உயிர்விடுவதே உத்தமம்.

செல்லாவிடத்துச் சினந்தீது செல்லிடத்தும் இல்லதனின் தீயபிற—என்பதை எண்ணாது வீண் வெகுட்சிகொண் டிக்கெதிக்காளானேன். தாய்க்குப் பின் தாரம், மந்திரிக்குப் பின் மனைவி என்பவளாகிய என் அருமைக்காதலி அலறிக்கதறிப் பதைத்து பாதத்தைப் பிடித்து எடுத்தோதிய இதவார்த்தையைத் தடுத்து வீணே மதிமோசம்போனேன்.

கற்பெனப்படுவது சொற்றிரம்பாமை, காவலனே பாவையர்க்கழகு என்றும், இல்லதென் இல்லவள் மாண்பானல் உள்ளதென் இல்லவள் மாணுக்கடை, என்றும் பெரியோர் சொல்லிய நீதியை மறந்து என் மனைவியாகிய மங்கையின் வார்த்தையைத் துறந்து இவ்வபராதத்திற்காளானேன். தெய்வமே,

அடிசிற்கினியாளே அன்புடையாளே
படிசொற்றவறாத பாவாய்—அடிவருடிப்
பின்தூங்கி முன்னெழுந்த பேதையே போரியோ
என்தூங்கு மென்கண் ணிரா.

கணவனது வாய்க்கு ருசியான பதார்த்தங்களைச் சமைத்து, கணவன் வந்தவுடன் காலலம்பச் சலங்கொடுத்து, இலையிட்டன்னம்படைத்து, அருகமர்ந்து அவனுடன் ஆசைவார்த்தைகளைப் பேசி சிறுகச் சிறுக மணாளனுக்கு சாதமூட்டிப் பின் புருஷன் கையலம்பி வந்தவுடன் வெற்றிலைப்பாக்குக் கொடுத்து தரித்துமிழ்ந்

ததும் படுக்கவைத்துப் பாதம் பிடித்துக் கணவன் தூங்கியபின் தானெழுந்து, உண்டிலைப்பாறிக் கணவனுடன் சயனித்துக் கணவன் விழிக்குமுன் அதிகாலையில் தானெழுந்து ஸ்நானஞ் செய்து விபூதி குங்குமமணிந்து, புருஷனை எழுப்பி அவனுக்குத் தனது திருமுக தரிசனங்கொடுத்துப் பின் மற்ற அலுவலைப்புரியும் பெண்களே கற்பிற் சிறந்தவர் எனக் கூறும் மகிமை வாய்ந்த எனது பாரியாள் சுசீலை என்னும் பெண்மணி சொன்ன வார்த்தையைத் தடுத்து பராக்கிரமத்தைக் கைப்பிடித்துச் சென்ற பாவமல்லவா, என்னை இவ்வித அவமானத்துக்காளாக்கியது. (யோசித்து)

ஆம் கணவன் மனைவியாகிய சதி பதிகள் இருவரில், கணவன் எக்காரியத்தை செய்ய விரும்பினும், மனைவியின் அனுமதியை அநுசரித்துச் செய்யவேண்டுமென்பது பழக்க வழக்கம்.

அதுபற்றியன்றோ, ஸ்ரீராமபிரானும் தன் தாய் வார்த்தைக்குட்பட்டு ஜடைமுடிமரவுரி யணிந்து கானகமேகுங்காலை, தனது மனைவியாகிய ஜானகியின் கருத்துக்கிசைந்து உடனழைத்தேகினன். இவ்வித பல விஷயமனைத்தும் உணர்ந்த பாவியாகிய நான் எனது மனைவியின் சொல்லைக் கேட்டிருந்தால் இது சமயம் இவ்விததுன்பத்திற்காளாக மாட்டேனல்லவா.

நடந்ததைக் குறித்து இனியோசிப்பதில் பலனில்லை, தற்சமயம் நேர்ந்த அவமானத்தைவிலக்கி, அதிசூரன் என்னும் பெயரை நிலைநாட்டு மார்க்கத்தையே நாம் பெரிதுங் கவனிக்க வேண்டும். ஆமாம் இதற்கெப்படி யோசனை. [யோசித்து]

## பாட்டு

(சத்திவேல் முத்துக்குமார என்ற மெட்டு)

சண்ணிகள்

யோசனையேது இனியே
ஊரறியா முன்னையே
மோசமாயே நாதியுயிரை
முடிப்பது நம்வேலையே யோ

சாமபேத தானதண்ட
சதுர்வித வுபாயமே
ஆதமனில் பேதமென்னு
மதைக்கைக் கொண்டால்ஞாயமே யோ

தனித்துச்சென்றே நாதிதன்னை
சமர்க்கழைத்துக் கொல்லுவோம்

ஜனித்த வெண்ணீ ரதனைப்பூசி
ஜங்கமர்போல் செல்லுவோம் யோ

வ-ம்:—இதுலே தகுந்த யோசனை, இது சமயம் ஏநாதியும் தனியாகத் தனது சிலம்பக்கூடத்தி லிருப்பான். தனிமையாகி சென்று மற்ெருருதரம் இருவரும் தனித்துச் சமர்புரிவோம் என்றழைத்தால் மனமிசைவான் ஏநாதி.

ஆனல் நாம்மாறுவேடமாக நெற்றியிலும் தேகத்திலும் விபூதியணிந்து மறைமுகமாகச் சென்று, பொருதுஞ் சமயம் பூதியணிந்த மேனியைக் காட்டி நிற்போமாகில், நாதன் உண்மையில் நம்மை எதிர்க்காது திகைத்து நிற்பான்.

விபூதி யணிந்தோர் எவராயினுஞ் சிவபக்தரென்று மதித்து அவருக்கு வேண்டிய உபகாரஞ்செய்வதே ஏநாதியின் விரத நெறியாதலின், நமது ஜெயானுகூலத்திற்கு இது வே தகுந்த யோசனை இனியொரு சிறிதும் யோசியாது ஏநாதியிடம் செல்வது உசிதம். [போகின்ருன்]

(சீன் முடிவு.)

சீன்—13. இடம்:—சிலம்பக்கூடம்

நடிகர்:—அதிசூரன், ஏநாதிநாதர்,

[ஏநாதி நாதர் தனித்திருக்கின்ருர். அதிசூரன் வரவு கண்டெழுந்து]

ஏநா. வ-ம்:—வரவேண்டும். இருளோங்கிய இந்நேரம் என்னை நாடித் தனித்து வந்தகாரணம் யாதோ போர்க்களத்திற் புறமுதுகிடச் செய்தேன் என்ற வருத்தங் கூடாது. (ஆசனத்தைக் காட்டி) இதோ இவ்வாசனத்தில் வீற்றிருக்கக் கோருகிறேன்.

[அதிசூரன் வெகு கோபக் குறியுடன்]

அதி. வ-ம்:—ஏநாதி நாதா, உபசார வார்த்தையை நிறுத்து. சுத்த வீரனுகில் தற்சமயம் என் கருத்துக்கிணங்க வேண்டும், அதாவது ஆனைக்கும் அடிசறுக்கும் என்பதை நீ யறிந்ததே. அதுபோல் இன்று மாலை எனது காலானுகூலபேதத்தால், புறமுதுகிட நேர்ந்தது. இது எவ்வித யுத்த வீரருக்கும் சகஜமே. எனினும் உன்னிடம் இன்னெருமுறை சமர் செய்யவே என் மனம் எண்ணுகிறது. ஆதலின்,

(விருத்தம்)

முன்னம் நீ ஜெயித்ததுண்மை
முழங்கிய வாட்போர்தன்னில்
மன்னனுன்தோற்றதுண்மை
மகாஜனமறிந்ததுண்மை
என்னினுமெனதுநெஞ்சம்
எண்ணியபடிக்கோமும்
இன்னமோர்தரம்போர்செய்ய
இதுததிவருகுவாயே

பாட்டு

சரசராணிகல்யாணி என்ற மெட்டு

பல்லவி

தனிமையாக சமர்புரிவோம்
சமர்த்தின் திறமை தெரிவோம்
இருவரும் இனி

அநுபல்லவி

விநயமாக நினையாதே
வேளைகண்டிடா தூரறிந்திடா
விளம்பரம்புனைந்திடா திருவரும் தனி

சரணம்

வருவாய்மனமது மயங்காது
வாட்போர்க்கள மாவனமீது
விருதார் வெற்றிவீரா
வேளையேதெரி நாளையேசரி
விரைந்தெதிர்ந் திருவருமறுதாஞ் தனி

வ-ம்:—விஷயமிதுவே, ஊராரறியா வண்ணம் இன்னுமொருதரம் நாமிருவரும் தனிமையாக யுத்தம் செய்ய வேண்டும். அதற்கு இன்றிரவு விடியும் நேரமே சரியானது, மறுத்துரைக்காது அவசியம் அமர்க்களம் வரவேண்டும். உன் இஷ்டமெப்படி.

(ஏநாதி நாதர் விருத்தம்)

நினைத்தநின்நினைப்புக்கெந்த
நேரமும்சலிக்கமாட்டேன்
ஜனத்திரள்வேண்டாமென்ற
தன்மைக்குமயங்கமாட்டேன்
கனைத்தெதிர்வந்தவுந்தன்
கருத்ததைமாற்றமாட்டேன்
தனித்துனதுடன்போர்செய்யத்
ததியிதுவருகுவேனே

## பாட்டு

### மணிபுரம்விட்டோம் என்ற மெட்டு

கண்ணிகள்

ஒருதாரம்பொருதி இடமதைக்கருதி
வோடிய அதிசூரா
ஒருநாளும்நானே உனக்குப்பின்னடையேன்
உரைப்பதுகேள் நேராய் (ஒரு)

இருவருந்தனியாய் மறுதாரம்பொருத
இணங்கினே னிதுநிஜமே
இருந்தாலுநீதான் எனைஜெயித்திடவே
எண்ணுவது சபலமே (ஒரு)

ஈஸ்வரன்சாக்ஷி பேசியசூட்சி
என்மனந்தனி லிருக்கும்
எந்நேரம்வருவாய் எனக்குரைத்திடுவாய்
இதுசமர் புவிமணக்கும் (ஒரு)

வ-ம்:—அதிசூரா. புறமுதுகிட்ட உனக்கு இனி நான் எவ்வித புத்தி கூறினும் செவிக்கு ஏற்காது. எனவே உன் கருத்துக்கிசைவது எனது கடமையாகும். நல்லது உன்னிஷ்டப்படி இருவரும் மறுதாரம் பொருதலாம். இவ்விஷயத்தை நான் வெளியிட மாட்டேன். எந்த சமயம் சண்டையைத் தொடங்கலாம்.

அதி. வ-ம்:—இன்றிரவு விடியற்காலைதான் அதற்கேற்றது. மாலை நடந்த யுத்தகளத்திற்கே வரவும்.

ஏநா. வ-ம்:—தடையில்லாமல் வருகிறேன். நாம் சென்றுவாரும்.

[அதிசூரன் போகின்றான்.]

(சீன் முடிவு.)

---

**சீன்—14.** இடம்—ஏநாதிநாதர் வீடு.

நடிகர்:—தெய்வகலாவதி—விநோதபாஷிதன்.

(தெய்வகலாவதி வீற்றிருக்க விநோதபாஷிதன் வருகிறான்.)

விநோ. வ-ம்:—அம்மணி! நமஸ்காரம்.

தெய்வ. வ-ம்:—ஆசீர்வாதம். அப்பா விநோதா! இன்று மாலை நடந்த வாட்போரின் யுத்த முடிவு என்னவானது.

விநோ. வ-ம்:—அன்னையே! அதிசூரர் தோல்வியுற்றுப் புறமுதுகிட்டோடினார். நமது நாதனார் ஜெயம் பெற்றாரம்மா.

தெய்வ. வ-ம்:—நல்லது. எங்கே ஏநாதிநாதன் ஏனின்னும் இங்கு வரவில்லை.

விநோ. வ-ம்:—அம்மா, யுத்தம் செய்த அலுப்பால் மாணவர்களையும் அருகில் வரவேண்டாமென்று சொல்லி சிலம்பக்கூடத்தில் தனித்திருக்கின்றார். சிரமம்நீங்கி வருவார், இது விஷயத்தைத் தெரிவித்துப்போகவே நானிங்குவந்தேன்.

தெய்வ. வ-ம்:—அவன் வரவுக்காகவே இந்நேரம்வரை காத்திருந்தேன். நல்லது அவன் சௌகரியப்படி வரட்டும். நான் சயனிக்கச் செல்கின்றேன். கண்ணே விநோதா, இரவில் அங்குமிங்கும் ஓடியலையாது வீட்டுக்குப்போய் உண்டுறங்கி காலையில்வா.

விநோ. வ-ம்:—உத்திரவுபோற் சென்று வருகிறேனம்மா-

[விநோதன் போகிறான் தெய்வகலாவதியம்மன் சயனித்து நித்திரை செய்யுந் தருணம் கனவுகண்டு பதரி எழுந்து]

பாட்டு

(என்ன பிழைப்பெனக் கென்ன மதிப்பு—என்ற மெட்டு)

ஆஹாயீதென்னபேராச்சர்ய மாகவே
ஆனதுநான்கண்ட கனவிது தானே
அதிசயமானதுவே-சோழப் பதிதனக்கா மிதுவே
அதிசூரன் சதிகாரன் மதிமாறி
ஆலோசனை செய்யவே (ஆ)

சூதாகவேவந்து ஏநாதிநாதனைத்
தோத்தரித்துவீர வாட்போர்க்கழைத்து
சொல்லுஞ் சமர்க்களமே—சென்று
கொல்லும் ப்ரயத்தினமே
சூட்சிசெய்த மாட்சிஎல்லாங் காட்சியாக
தோணுதென் கண்முன்னமே (ஆ)

கண்டகனவும் பலிக்குமோநானிந்தக்
காலத்திலேயிதை வேறார்க்குரைப்பேன்
காணுஞ் சமர்க்களமே—சென்று
காணுவேன் நிச்சயமே
காலகாலா மேலுலோலா தேவிசிலா எமைக்
காவாய்நமச்சிவா யமே (ஆ)

வ-ம்:—என்ன ஆச்சர்யமிது! அயர்ந்து சயனித்துறங்குங்காலை என்றுமில்லாதின்று நூதனமான ஓர் சொற்பனங்கண்டேன். காலைநேரங்கண்ட சொற்பனங் கைமேற்பலிக்குமென்று கணிதவல்லார் சொல்லியிருக்கின்றனர்.

எனது மகன் ஏநாதியானவன் நேற்றுமாலை நடந்த வாட்போரில் அதிசூரனை அபஜெயத்துக்காளாக்கித் தனது சிலம்பக்கூடத்தில் தனித்தமர்ந்து சிரமபரிகாரம் செய்திருக்கும் வேளையில், அதி

சூரன் வஞ்சகமனதைக்கொண்டு, வஞ்சகச் சூட்சியாக ஏநாதியைக் கொல்ல நினைத்து, இருவருந் தனித்து சமர்புரிவோமென ஏநாதியை சமர்க்களத்தழைத்தேகி, சதிகாரனுகிய அதிசூரன் சந்யாசிவேஷம்புனைந்து, ஏநாதியின் அருகிற்செல்ல, விபூதியணிந்து வந்தவர் மெய்யான அடியவரென்று ஏநாதிநாதன் வாளைக் கையேந்தியவண்ணம் பிரம்மித்து நிற்குஞ்சமயம் அதிசூரனென்பவன் அணுவளவுந் தயாதாட்சண்யமின்றி ஏநாதியை வெட்டி வீழ்த்தக் கனவுகண்டேன்.

கனவா அல்லது நினைவா. நிதானித்து யோசிக்குங்கால் இவ்விஷயமாக நான் கண்ட கனவு உண்மையாயிருக்குமென்றே தோற்றுகிறது. (யோசித்து)

எல்லாம் ஈசன்செயல். ஒருவருமறியாவண்ணம் நாம் சமர்க்களஞ் சென்று காண்பதே உசிதம். விரைந்து போகலாம். போகிறுள்.

(சீன் முடிவு)

---

சீன்—15. இடம்—யுத்தகளம்.

நடிகர்:—ஏநாதிநாதர், அதிசூரன், பார்வதி, பரமசிவன், தேய்வகலாவதி.

[சமர்க்களத்தில் ஏநாதிநாதர் யுத்தகோலத்துடன் நிற்கின்றுர் அதிசூரன் (தேகமெங்கும்விபூதி பூசி ருத்ராக்கமாலை யணிந்து கௌதமமாக) கேடயத்தால் தனது நெற்றியைமறைத்துக்கொண்டுவாளாயுதத்தைக் கையேந்தி வரக்கண்ட நாதனுர் அவனைப் பார்த்து]

பாட்டு-தர்க்கம்

(தக்கபாராங்கல்லைத் தூக்கி என்ற மெட்டு)

கண்ணிகள்

ஏநா. வாராய் வாராய் அதிசூரா எந்தன்
வாளுக்கிரையாகும் வீரா சமர்த்
தாராயென் தாயாதி காரா கெர்வ
தானப்ர தானஜ ஞரா (வா)

அதி. போடா போடா யேநாதி தத்வ
புருஷாதிக்கமற்ற தாதி வுனக்
கேடா கூடமான ஜாதி என்று
வின்றறிவாருந்தன் சேதி (போ

ஏநா. சேதியைக்கண் டோட்டம் பிடித்தாய் காலைச்
சேவித்து நற்புகழ் படித்தாய் வீண்
வாதிதற்கே பின்னு மடுத்தாய் என்முன்
வருவாயாகி லுயிர் விடுத்தாய் (வா)

அதி. விடுத்துக் கட்டடா வீண்பேச்சு வுன்
வீரமெலா மெங்கே போச்சு சமர்
தொடுத்து நின்றாலொரு வீச்சு தனில்
சொர்க்கம் போமடாவுன் மூச்சு (போ)

[இருவரும் சண்டை செய்ய எத்தனிக்குங் காலை அதிசூரனானவன் நாதனார் அருகில் நெருங்கியதும் கேடயத்தால் மறைத்திருந்த விபூதி யணிந்த தனது நெற்றியைக் காட்டியதும் நாதர் மனப் பிரம்மை கொண்டு]

## பாட்டு

(தாமதமிலாமலே தவங்கலைக்க என்ற மெட்டு)

கண்ணிகள்

ஆயிதென்ன ஆச்சரிய மான திந்த வேளை
வேயுறு தோளிபங்கன் விபூதி மகிமையாலே (ஆ)

நீறணிந்த மேனிகொண்டு நிற்கின்றார் சிவநேசனே
வீறணிந்த வாளையோங்க வெண்ணினே னென்னமோசமே (ஆ)

பாவம்பாவ மிவரைக்கொன்றால் பாமனுக்கப சாரமே
பூவுலக மேசுநம்மை புகுவதும் புத்தாரமே (ஆ)

சாமியிவ ரெண்ணிவந்த சங்கதிப் படிக்கே
நாமிவர்க் குயிர்கொடுத்து நாடுவோ முத்திக்கே (ஆ)

வ-ம்:—என்னயிது. அதிசூரனுடன் யாவருமறியாவண்ணந் தனித்து உஷத்கால வேளையில் வாட்போர்செய்ய வந்து நிற்கும் நமதெதிர் வருபவன் அதிசூரனென்றே அறைகூவியழைத்தோம்.

அவனும் அவ்வதற்கேற்ற பதிற்கூறினன். ஆனால் வாளைக் கையேந்தி அமர்புரிய யுத்தம் தொடங்குங்காலை அதிசூரனது திருமேனியைக்காண, விபூதியணிந்து, ருத்ராக்கமாலை புனைந்து, காவிதரித்து, திருவோட்டைக் கையேந்திய நமது பரமசிவனின் பக்தனைப்போலத் தோற்றுகிறது.

ஆம். ஐயோ தெய்வமே! இவர் அதிசூரரல்ல. எவரோ ஒரு சிவனடியார். அந்த அதிசூரருக்கு ஜெயம்தரவேண்டி நம்முன் இக்கோலத்துடன் தோன்றி நிற்கின்றார். இதுவுண்மை. இது சத்தியம். ஆதலின், இதுசமயம் நமது முன்னிற்கும் சிவனடியாரை அதிசூரரென மதித்துக் கொல்வோமாகில்

பாட்டு ஷ மெட்டு

பாவம்பாவமிவரைக்கொன்ருல் பரமனுக்கபசாரமே
பூவுலகமேசுநம்மை புகுவதும்புத்தாரமே (ஆ)

**வ-ம்:**—ஆமாம். இந்த அடியாரிடம் நமது வாட்போர் வித்தையைக் காட்டி அவரை நாம் கொல்லுவோமாகில், உண்மையில் நாமனுபவிப்பது நரகதண்டனே. தவிற நாம் கைப்பிடித்த விபூதிமான்மியத்துக்கும் இதுசெயல் அழகாகாது.

நமது எதிர்நிற்பவர் உண்மையான சிவனடியாரென்ருலும் சரி, அல்லது நம்மை வஞ்சித்து வாட்போரில் தான் ஜெயம்பெறவேண்டுமென்று அவ்வதிசூரனே இவ்வித வேடம்புனைந்து நின்ருலும் சரி. ஆக இவ்விருவரின் நினைப்பென்ன.

ஏநாதி என்பவனைக்கொன்று தாம் எதேச்சாதிகாரமாக எயினனூரில் வாழலாம் என்பதே இவர்கள் கருத்தாகும்.

ஐயோ பாவம்! இந்த ஒருயிரிறந்தால் இவ்வூரில் அல்லது இச்சோழமண்டலத்தில் எத்தனையோ கோடி வுயிர்கள் பிழைக்கும்.

இதை நாம் நாம் சொல்லவுந் தகாது. இந்த வார்த்தையை உபயோகித்த பழிபாவமும் நம்மைப் பின் தொடரும்.

நல்லது. நமது விரதமகிமை என்ன. விபூதியணிந்து எதிர்வரும் பரமனடியவர்க்குப் பணிவிடை செய்வதும், அவ்வடியார் பாதத்திற்காளாவதுமே நமது கடமை. அதன்படி இதுசமயம் இந்த யுத்த களத்தில் நம்மை எதிர்த்த அதிசூரனுயினுஞ் சரி, அல்லது அவனது தற்காப்புக்காகவேண்டி விபூதியணிந்த மேனியுடன் வாட்போர் செய்யும் வல்லமை வகித்து வந்த மற்ற எவராயினுஞ்சரி எவ்விதத்தும் என்னைக்கொன்று வெற்றி பெறவே இக்கோலத்துடன் வந்திருக்கின்றனர். ஆதலின் நெற்றியிலணிந்த விபூதியைக்கண்ட நான் அவர்தம் இஷ்டத்திற்கிணங்குவதே நன்று.

விருத்தம்

நிரபராதியைக்கொன்ருலும் நேர்ந்திடுமவர்க்குத்தோஷம்
வரமிகுவாட்போர்செய்யும் வாறுபோற்கரத்தைத்தாழ்த்தி
பொருதிடுகோலங்காட்டிப் புனைதிருநீற்றைப்போற்றி
இருநிலந்தனிலேநின்று இவர்க்கிரையாதல்நன்றே.

**வ-ம்:**—எவ்விதத்தும் என்னைக்கொன்று வெற்றிபெறு மார்க்கத்துடன் வந்திருக்கின்ருர். இச்சிவனடியார். இவரது மனக்கோரிக்கையைக் கலைப்பது அல்லது தடுப்பது திருநீறணிந்த திருமேனி

யைக் கண்டும் நாம் இவருடன் யுத்தம் செய்து ஜெயிப்பது என்பது நமக்குக்கூடாது.

வெண்ணீறணிந்து என் கண்ணுக்குக் காட்சியளித்த இவ்விமலனார் விபூதியணிந்த நெற்றியைக்காட்டி என் மனதைக் கவர்ந்த மா பெரும் பாமனார் திருநீற்றைப்பூசிய தேகத்துடன் என்னுடன் வாட்போர் புரியவந்த இவ்வடியவர் கொண்ட நினைப்பெது. என்னைக்கொன்று தாம் புகழ்பெறவேண்டியேயாம்.

ஆதலின் என் கைவாளாயுதத்தைக் கீழெறிந்து நிற்பேனாகில் நிரபராதியாகிய என்னைக்கொன்ற தோஷமும் அவரைப் பின்பற்றும்.

வேண்டாம். அவரை எதிர்க்கும் பாவனைகாட்டி கேடய வாளாயுதத்தைக் கையேந்தி நிற்போமாகில் அதிசீக்கிரம் அவர் நம்மைக் கொன்றுவிடுவார்.

ஆயுதபாணியைக்கொன்ற கீர்த்தியும் அவருக்குக் கிடைக்கும். (யோசித்து) ஆம். இதுவே சரி.

[வாளையேந்திய கையுடன் தலை குனிந்து ஏனாதிநாதர் நிற்கும் சமயங் கண்ட அதிசூரன் அவரைத் தன் வாளாயுதத்தால் வெட்டி வீழ்த்தி ஓடுகின்றான். உடன் ஸ்ரீ பரமசிவன் பார்வதி சமேதராக எழுந்தருளுகின்றார். தெய்வ கலாவதியம்மை அங்குவந் திக்கோலத்தையும், தான் கண்ட கனவு பலித்ததையுங் கண்டு]

## பாட்டு

(செந்தூர் வேலாண்டி என்ற மெட்டு)

### பல்லவி

இடபாகத்தமர்வாண்டி எம்மையீ
டேற்றவருவாண்டி அம்மை (இட)

### அநுபல்லவி

படநாகமது புனைவாண்டி பஜிக்கும்பக்தர்க் கருளாண்டி
பரமசிவ னெனுமோர் பெரியபெயரிலகும்
எயினனார் வளர்வுமை மனது மகிழ (இ)

### சரணம்

ஏனாதிக் குகந்தாண்டி எனது துயர் தவிர்ப்பாண்டி
எதிரியதி சூரானி நுதலி லணிவிபூதி
யதனின் மகிமையுல கறியச்செய் தம்மையிட (பா)

## விருத்தம்

வாழையடி வாழைஎன வந்த திருக்கூட்ட
மரபினில்யான் ஒருவனன்றோ,—வகையறியேன் இந்த
ஏழைபடும் பாடுனக்குத் திருவுளச் சம்மதமோ
இது தகுமோ இதுமுறையோ இது தர்மந்தானே
மாழைமணிப் பொதுநடஞ்செல் வள்ளால் [வோ
யானுனக்கு வாய்த்தமகனலனோ நீஎனக்குவாய்த்த தந்தையல
கோழைவுல குயிர்த்துயர மினிபொறுக்க மாட்டேன்
கொடுத்தருள்நின் அருளொளியைக் கொடுத்தருளிப்பொழுதே.

[பரமேஸ்வரன் பார்வதியாருடன் எழுந்தருளி]

## பரமசிவன் பாட்டு

(ஆலவாய்மதுராபுரி என்ற மெட்டு)

ஞானமே தரு நாதியே ஏ மோனமே பெறும் நாதியே
தியான மந்திர தேகியே சிவ நீறணிந்தொளிர் யோகியே (ஞா)

(தொகையரா)

பதிமீதுநினதுபெயர் துதிபெற்றுலாவவும்
பக்திஎங்கும் பரவும்
அதிஞானனதா யாதியால்காயனு
ராதிக்க மோங்கவைத்தேன்

## பாட்டு

நினைந்துநின்பெயர் நீறணிந்திடு
நேசர்தம்பெயர் நீடுமே
புனைந்துநின்கதை கேட்குமடியரை
புகழுமுலகு கொண்டாடுமே (ஞா)

(தொகையரா)

சாம்ராஜ்யமோக்ஷதெய்வீகயேநாதினின்
தாய்க்குநம் வீடுதந்தோம்
ஓம்நமசிவாயசங்கர லிங்கபாமாலை
ஓங்குநம்மார் பணிந்தோம்

## பாட்டு

நாயன்மார்களில் நீயுமொருவனே
நட்சத்திரமுத்தி ராடமே
தூயநினதுபுராண நாடகந்
துலங்குமாபுவி எங்குமே (ஞா)

வ-ம்:—பக்தா ஏநாதிநாதா! இன்றுமுதல் உனக்கு ஏநாதிநாத நாயனார் என்னும் பெயரைக் கொடுத்ததுடன் உனது மோட்ச சாம்ராஜ்ய உத்திராட நட்சத்திரத்தைக் கொண்டாடும் அடியார்களுக்கும் அஷ்ட ஐஸ்வரியத்தையுங் கொடுத்துக் காப்பாற்றுகிறோம்.

உனது விபூதி ப்ரசாதமகிமை விளங்க வேண்டியே இத்திருவிளையாடலுக்கு உன்னையாளாக்கி எமது தரிசனந் தந்தோம். நினது அன்னையாம் தெய்வகலாவதிக்கும் எமது திருவடிநீழலளித்துப் பாதுகாக்கின்றோம். யுகாந்தகாலமுழுவதும் உனது சரித்திர நாடகமாகிய விபூதிமான்மியம் தழைத்தோங்கி மங்களாசனம் பெறுமாக.

[பரமசிவன் மறைகின்றார். ஏநாதிநாதரும் தெய்வகலாவதியம்மையும் ஜோதி உதயத்திற் பிரவேசித்து சிவபிராப்த மெய்துகின்றனர்.]

சுபம்! சுபம்!! சுபம்!!!

## சகலரும் பாடுதல்

பித்தாபிறைசூடிப் பெருமானே யருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெ நல்லூ ரருட்டுறையுள்
அத்தாவுனக் காளாயினி யல்லேனெனலாமே.

நாடகம் முற்றுப்பெற்றது.

---

திருமகள்விலாசம் பிரஸ், சென்னை:—1935.